[illegible].

[illegible] 12 [illegible] 10.

[illegible] 1939

3L
ɗɗ2 11, N12:2 S14
N39.12.10.
186925

1072

REGD. No. 3843.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
3-JUN 1939
MADRAS



சிவநேசன்

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

ஆண்டு கக. } திட்டை பிரமாதி—வைகாசி 1939—ஜூன்—1௳ { திங்கள் க௦.

எண்.	உள்ளுறை.	பக்கம்.
1.	சிவநேசனுக்கு வாழ்த்து ...	229
2.	மதிப்புரை மஞ்சரி ...	231
3.	பரசுராமன் பாவ நீங்கியது ...	233
4.	விபூதி மகிமை ...	,,
5.	ததிசிப்பிரபாவம் ...	234
6.	இல்லிகவாய் பருவம் ...	235
7.	ஆணவமலமுள்ளபோதே மாயை கன்மங்களுமுண்டு	240
8.	செங்குட்டுவன் தமிழ் மொழிப்பற்றும் தாய்நாட்டுப் பற்றும்.	241
9.	வேதச் செய்யுள் ...	245
10.	மதிப்புரை மஞ்சரி ...	248
11.	சைவசமயம் ...	249
12.	வாழ்த்துரை	251
13.	பொதுமொழி	(1—8)

ஆசிரியர்:— ராம. து. ராம. இராமசாமி செட்டியார், திட்டை. (S. I. R.)

செய்தித்திரட்டு.

உள்ளூர்:—சிவசந்நிதித் திருக்குளத்தில் வைகாசி ககஉ முதல் ஜூன் பூட்டி கசுஉ வரை தண்ணீர் இறைத்து முடிந்தது. கசஉ முதல் வடக்குப்படித்துறை தெற்குப் படித்துறை இரண்டிற்கும் முகூர்த்தஞ் செய்து வேலைகள் நடைபெற்றுவருகின்றன. உகஉ யன்று சிவாலயத்தில் அம்பிகைசந்நிதிமுன்பாக இரண்டாந்திருமதிலில் திருநிலைக்கால் நிறுத்தப் பெறும்.

இவ்வூர்ப் பள்ளர் பறையர்களுக்கு நத்தம், குளம், கிணறு, கோயில், மயானம் முதலியவை ஒவ்வொன்றும் தனிப்பட அமைந்திருக்கிறது. இவ்வூருக்குப் புறம்பாய்த் தென்கிழக்கில் 5-பர்லாங்குக்கப்பால் வம்பு தன்பில்லாமல் குடியிருப்பவர்களை வம்பு தன்புகளை யுண்டுபண்ணிப் பணம் பறிக்குங்குணம் படைத்த இவ்வூர்ப் பட்டாமணியம் சேஷாத்திரி ஐயங்கார் அப்பள்ளர்களுக்குள்ளாளாயிருந்து அவர்களை சிவன்கோயில் குளத்தில் உரிமை கொண்டாடும்படி பலவாறான கலாம் விளைத்துவருகிறார். அவர் வீட்டளவில் வேண்டுமானால் சாதிமுறைவித்தியாசமின்றி யாரும் போகலாமென்று அவர் விட்டுக்கொடுக்கலாமேயல்லாமல் மற்றையோர் வீடுகளிலும் கோயில் குளங்களிலும் சாதிமுறை வித்தியாசமின்றிப் புகவிடவேண்டுமென்பதற்கு இவர்யார்? இவருக்கென்ன அதிகாரம்? உண்மையில் அவர்கள் நன்மைக்காக உழைப்பவரானால் மேலைத் குளத்துப்படித்துறை, பெருமாள் கோயில், வாடகைக்கு அமைக்கப்பட்டுள்ள ஜில்லாபோர்டு பள்ளிக்கூடம் ஆகியவைகளில் முன்னதாக அவர்களை நுழையவிட்டுப் பார்க்கலாகாதா? பறையர் பள்ளர்களுக்குள் வித்தியாசமில்லாமல் அவ்வகுப்பார்களுக்கென் றேற்பட்ட குளத்தில் ஒரே துறையில் சேர்ந்து முழுகவும், கிணற்றில் நீரெடுக்கவும் செய்யலாகாதா? ஐயோபாவம். இவர் சிவத்துரோகத்துக்கு ஆளாகத்தானோ பள்ளர் தெருவில் பள்ளர்களால் மாலைபோடப்பட்டார். இவர் பட்டாமணியம் பார்க்கவோ, பஞ்சாயத்து போர்டுதலைவராக இருக்கவோ தகுதியற்றவரென்பதற்குப் பல காரணங்களுண்டு. வேண்டியவமையம் விளக்குமாற்றால் விளக்குவோம். இவர் குடியிருக்கும் தெருவை மாத்திரம் பெருக்கவும், மற்றைத் தெருக்களில் பெருக்காதிருக்கவும், சரியானபடி விளக்குப் போடாதிருக்கவும் செய்கிறார். பொதுப்பணத்தைத் துர்விநியோகம் சொந்தவிநியோகம் செய்யும் இவரை மேலதிகாரிகள் விசாரித்துத் தண்டித்துப் பதவிகளைவிட்டு வெளி விலக்கக்கூடாது? திருக்குளத்துத் தண்ணீரைப் புதுக்குளத்தில் பெருக்கிப் பொதுஜனங்களுக்கு உபயோகமாகச் செய்திருக்கிறது.

கருந்திட்டைக்குடியிலிருந்து ஸ்ரீ பெரியநாயகி சமேத ஸ்ரீவசிட்டேசுவர சுவாமி வைகாசு பிரமோற்சவ சப்தஸ்தான மகோற்சவங்கொண்டருளுமுறையில் ககஉ இத்திருத்தலத்துக்கு சிவிகாரோகணராய் எழுந்தருளிக் காட்சிதருவர். தமிழ்மக்களும், சௌராட்டிர மக்களும் தனித்தனியே ஆயிரக்கணக்கான மக்கட்கு அமுதருத்தி இன்புறுத்துவர்.

ஆனையாத்தாளென்னும் அம்பிகைக்கு இம்மதி அஉ பூச்சொரிந்தும், கஉ கரகமெடுத்துப், ககஉ மஞ்சள் நீராடியும், கo-ககஉ களில் சத்தியவான் சாவித்திரி, கோவலன் என்னும் இருநாடகங்கள் நடாத்தியும் ஊரவர் விழாக்கொண்டாடினர்.

சிவமயம்.
திருச்சிற்றம்பலம்
சைவமுந் தமிழுந் தழைத்தினி தோங்க

சிவநேசன்.

செந்தமிழ்த் திங்கள் வெளியீடு.

திருத்தென்குடித்திட்டை.

ஆண்டு கஉ. } பிராமதி—வைகாசி 1939—ஜூன்—1௳ { திங்கள் கo.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS 3- . 1939 MADRAS

உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி
அடியே னடுவு ளிருவீரு மிருப்ப தானா லடியேனுன்
அடியார் நடுவு ளிருக்கும் அருளைப் புரியாய் பொன்னம் பலத்தெம்
முடியா முதலே யென்கருத்து முடியும் வண்ணம் முன்னின்றே.

சிவநேசனுக்கு வாழ்த்து.

(மணலை, திரு. ச. நா. குமரகுரு அவர்கள்.)

மன்குடிலைப் பொருள்சிவ மூர்த்தமாய்
வந்தவாறு நால்வர் சொலச் சேக்கிழார்
தன்குடிவழி மாந்தர் மறந்ததால்
சைவம்பூசை தமிழுந் தழைத்திட
இன்குடிவளம் எய்பல வான்குடி
இராமசாமிநம் வள்ளல் திருப்பணித்
தென்குடித் திட்டையிற்சிவன் கோயில்வாய்த்
திங்கள்தோன்று சிவநேசன் வாழ்கவே.

1. சீரார் கயிலைச் சிவன்றிறத்தைத் தேசமெங்குந்
தேரார்க் குரைக்குஞ் சிவநேச—காராப்
பலவான் குடிதோன்றிப் பண்ணுறுந் திட்டை
நிலமேற்றாய் நிற்கார் நிகர்.

2. நிகரில்லா வீசன் நிலையை யுலகில்
சிகரமெனக் காட்டுஞ் சிவநேச—அகம்
அறியாரும் உன்னை அறிவார் அறியா
வெறியாளர் என்பிறந்தார் வீண்.

18697

3. வீணின்றிப் பத்திரிகை மேன்மை யெலாஞ்சூழ்ந்தே
சேணுக் குயரும் சிவநேச—காணும்
அடியார்க்கு நல்லார் அரனருக் கன்பர்
படிமீதுள் ளார்நின்னன் பால்.

4. பாலுக் கழுத பன்வன் முதல்நால்வர்
சீலந் தழைக்குஞ் சிவநேச—காலங்
கடவாமல் வந்துன் கடமை முதலாய்த்
தடையறவே செய்வாயெந் தாய்.

5. தாய்தந்தை சுற்றமொடு தாரம் சகமுழும்
சேயென் றுமாவாய் சிவநேச—வாய்மையரு
ராமசா மிப்பெரியான் நல்லகத்தி னுள்ளிருந்து
தாமமெனத் தோற்றுந் தமிழ்.

6. தமிழைமுன் மூவரசர் சங்கப் புலவோர்
சிமிழ்வைத்துக் காத்தார் சிவநேச—அமிழ்தினிய
பாடலெலாம் கல்லார்பாற் பண்ணிழந்து மண்ணவரால்
வாடலென்ப தென் றுநிற்கு மா?

7. நிற்குங் கிழக்கும் நிகர்மேற்கு மேவடக்குந்
தெற்கும் உலவுஞ் சிவநேச—கற்கும்
நல்லாருள் ளூறிநலம் நந்தமிழ்போல் இந்திமொழி
செல்லாதென் றெங்குநனி செப்பு.

8. செப்பரிய சீரும் செயலும் அருந்தவமுந்
தெப்பமெனச் சேர்க்கும் சிவநேச—அப்பணிவான்
மெய்யடியார் வெண்ணீறு மேன்மைப்பஞ் சாக்கரஞ்சொல்
தெய்வநிலையும் விளங்கச் செய்.

9. செய்தமிழ்தே வாரதிரு வாசகமெய்த் தொண்டென்றுஞ்
செய்வோர்க் கருளுஞ் சிவநேச—கைவருமெய்
மாமுகத்தான் ஆறுமுக மாகடவுள் எல்லாரும்
ஓர்முகமா மென்றே யுரை.

10. உரைக்கரிய சீரும் உயர்வுந் தமிழுந்
தெரிக்கரிய தெய்வச் சிவநேச—மரிக்கும்
மாந்தர் உணராத வண்பெருமை கொண்டொளிர்ந்த
[illegible]தமிழ வாமுன் றகை.

உ

மதிப்புரை மஞ்சரி.

சென்னை மகாமகோபாத்தியாய தாக்ஷிணாத்திய கலாநிதி டாக்டர், உ. வே. சாமிநாதஐயரவர்கள் பதிப்பித்த நூல்கள்:—

1. திருக்காளத்திநாதர் இட்டகாமியமாலை:—இதனை இயற்றியவரின் ஊர், பெயர் இன்னதென்று தெரியவில்லை. இவர் உடற்பிணியும் வறுமைப் பிணியும் நீங்க இம்மாலையை இயற்றியுள்ளார் என்பது முகவுரையாலும், இந்நூற் செய்யுட்களாலும் தெரியக்கிடக்கின்றது. காப்பும், 46 செய்யுட்களுமே கிடைத்துப் பதிப்பித்துள்ளார்கள். தேடுவாரின்றிக் கிடந்த இந்நூல் ஐயரவர்கள் கைவரப்பெற்று இவ்வளவிலாவது வெளிவந்தது காளத்திநாதர் கருணையேயாகும். செய்யுட்கள் செப்பமாக உருக்கமுடையனவாகத் திகழ்கின்றன. ஐயரவர்கள் குறிப்புரையுடன் கூடியுள்ள இப்புத்தகம் விலை அணா இரண்டு.

2. தணிகாசல புராணம்:— முருகக் கடவுளின் குன்றுதோறாடலுள் ஒன்றாக விளங்கும் திருத்தணிகாசலமென்னும் இத்திருத்தலம் சென்னைக்கணித்தாகவுள்ளது. திருத்தணிகைப் புராணம், திருவிருத்தம், சந்நிதிமுறை ஆகிய பல நூல்களால் விதந்தோதப் பெறுவதும், இடையறாது அடியார்கள் வந்து பராவுவதும் ஆகிய பெருமையையுடையது. திருவாவடுதுறை யாதீனத்து திராவிடமாபாடிய கர்த்தராகிய மாதவச் சிவஞான யோகிகள் மாணாக்கரும், கவிராக்ஷஸருமாகிய கச்சியப்ப முனிவர் இயற்றிய மிக விரிந்து பரந்த திருத்தணிகைப் புராணமிருப்பவும், திருத்தணிகைப் புராணச் சுருக்கமாக யாவரும் எளிதில் படித்துணரும் பொருட்டு அவர்தம் மாணாக்கர் கந்தப்பையர் என்பவர் தணிகாசல புராணமென இதனை வடமொழிப் பெயர்ப்பாகத் தமிழில் 426 செய்யுட்களாகப் பாடியுள்ளார்.

முருகவேளின் பரத்துவத்தை அழகாக எடுத்து ஆண்டுள்ளார். ஞானசத்திதராகிய முருகவேள், தெய்வயானையம்மையார், வள்ளிநாயகியார், வேற்படை, மயில், கோழிக்கொடி, நவவீரர், படைத்தலைவர் ஆகிமூர்த்தங்களைத் தனித்தனியாகத் துதித்துள்ளார். அடைமொழியின்றிக்கவிதொடுக்கும் ஆற்றலுடையவர் என்பது இந்நூற் செய்யுட்களால் அறியக்கிடக்கின்றது. இதன் ஏட்டுப்பிரதிகளை மகாமகோபாத்தியாய ஐயரவர்கள் தேடிவைத்திருப்பதையறிந்த திருவாளர் ராவ்பகதூர் வ. சு. செங்கல்வராய பிள்ளை M. A. அவர்கள் பொருளுதவிப் பதிப்பித்து வெளியிடுமாறு வேண்டிக்கொள்ள ஐயரவர்கள் முகவுரை குறிப்புரைகளும் அத்தியாயங்களின் தலைப்பில் கதைச்சுருக்கங்களும் எழுதிப்பதித்து வெளியிட்டுள்ளார்கள். இதன்விலை அணா பத்து.

திருத்தணிகைக் கோவையைத் தேடிப்பெற்று விரிந்த ஆராய்ச்சிக் குறிப்புகளுடன் ஐயரவர்கள் எழுதிச்சித்தமாக வைத்திருப்பதைப் பதிப்பித்து வெளியிடச்செய்ய அன்பர்கள் முன்வருவார்களானால் எல்லோரும் படித்து இன்புறவும் திருத்தணிகைப் பெருமான் திருவருளைப் பெறவும் ஏதுவாகும்.

3. **நல்லுரைக்கோவை:—** இதன் நாலாம்பாகத்தை இருபது கட்டுரைகளுடன் பதித்து வெளியிட்டுள்ளார்கள். ஒவ்வொரு கட்டுரைகளும் கற்பனைக்கதைகளல்ல: அருமைப்பாடுடைய உண்மை வரலாற்றுரைகளே. அவைகள் மக்களின் அறிவைப் பரிபக்குவப்படுத்தி இன்புறச் செய்வன. பெருமையிற் சிறந்த பெரியார்கள், புலவர்கள் ஆகிய பண்டைத் தமிழர்களின் சீரிய தன்மையை மாத்திரம் விளக்குவதோடமையாது யானையின் நன்றியறிவு, இயற்கைப் பொருள்களின் சிறப்பு முதலியனவும் செறிந்து கற்றாரும், கற்பாரும், கல்லாரும் கழிபேருவகை பூப்ப மிளிர்கின்ற இந் நாலாம் பாகத்தையும், இம்முறையேமுன்வெளிவந்த மூன்றுபாகங்களையும் கல்லூரிகளில் பாடபுத்தகமாக வைத்துப் பயிற்றுவித்தால் மாணவர்கள் பயின்று பண்டைப்பெரியார் முதலானவர்களின் பலவேறு வரலாறுகளையும் உணர்ந்து பெருந்தகையாளராய்ப் பிறங்கிப் பெரிதும் பயன் பெறுவரென்பதில் சிறிதும் ஐயமில்லை.

பொய்பல புனைந்து மெய்யறிவைப் போக்கும் வீண்நாவல்களைப் படித்துக் காலத்தை வறிதே பறிகொடாமல் நல்லுரைக்கோவை நான்கு பாகங்களையும் நான்குவேதங்களைப்போலப் போற்றிப் பயிலுதல் நன்மக்கட்குரிய கடனும். இதுவே தண்டமிழ்த்தவப்புதல்வப் பெரியாராகிய மகாமகோபாத்தியாய ஐயரவர்கட்குச்செய்யும் கைம்மாறுமாகும். பொன்போற் போற்றி இன்புறத்தரும் இந்நாலாம் பாகமும் விலை அணா பன்னிரண்டே.

திருநாரையூர்ப்புராணம்:— பொல்லாப்பிள்ளையார் நம்பியாண்டார் நம்பி நிவேதிப்பதை உவந்துஉண்டு அருள் செய்து அவரால் மூவரருளிய தேவாரத் திருமுறைகள் வெளிவரச்செய்த பெருமைக்கு இருப்பிடமாகிய இத்திருத்தலபுராணம் வடமொழி ௫௧ அத்தியாயங்களையும் ஆயிரத்தெழுநூற்றறுபத்தாறு சுலோகங்களையுமுடையது. தஞ்சாவூர் சரஸ்வதிமால் கஞ்சனூர் முதலிய இடங்களிலிருந்து மூலப்பிரதிகளைத்தேடி வடமொழி மூலம் தனிப்புத்தகமாகவும், தமிழ் மொழிபெயர்ப்பு உரைநடை தனிப் புத்தகமாகவும் இத்திருத்தல சிவாலயத் திருப்பணிச்செல்வர்களான காரைக்குடி ப. ராம. இலக்குமணச் செட்டியார், கோட்டையூர் க. வீ. சொ. அழகப்ப செட்டியார் ஆகியவர்களின் கட்டளையும் பொருளுதவியும் சூரியனார்கோயிலாதீனத்து உயர்திரு. முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகள் உதவியுங்கொண்டுதிருநாரையூர் சைவத்திருவாளர் ரா. முத்துக்குமார பிள்ளையவர்களால் பதிக்கப்பெற்றுள்ளது. இதனைச் சைவமெய்யன்பர்கள் ஒவ்வொருவருங் கைவரப்பெற்று மூர்த்திதல தீர்த்தங்களின் மகிமைகளையும் வழிபட்டுப் பேறுபெற்றவர் வரலாறுகளையும் தெரிந்து பொல்லாப் பிள்ளையார், திரிபுரசுந்தரி சமேத சௌந்தரேசர் ஆகிய மூர்த்திகளின் நல்லருளையும் பெறலாம். இத்திருத்தல தேவாரப்பதிகங்கள் ஐந்தும், நம்பியாண்டார் நம்பியருளிச்செய்த திருநாரையூர் விநாயகரிரட்டைமணிமாலையும் இதிற் சேர்க்கப்பட்டுள்ளன.

அன்பளிப்பு:— தேவகோட்டை திரு. V. இராமநாதன் அவர்கள் இயற்றித்தந்த சொற்பனவுலகம் என்னும் கற்பனைக்கதையின் பொருட்டு அன்பர்கள் அளித்த 6 கட்டுரைகளும் ஆசிரியர் கட்டுரையும் சேர்ந்து எழு கட்டுரைகள் தத்தம் அறிவுக்கு ஏற்றமுறையில் நாட்டுப்பற்று, நாட்டு மொழிப்பற்று, கானப்பற்று, தெய்வப்பற்று, காதலர் பற்று, புலவர்பால் புரவலருக்குள்ளபற்று ஆகியவைகளை விளக்கும் புத்தகம் தேவகோட்டை, சாரதா நிலையத்தார் வெளியிட்டது.

பரசுராமன் பாவம் நீங்கியது.

(புலஸ்தியர் சொன்னது.)

(வனபர்வம் தமிழ் மொழிபெயர்ப்பு 81-வது அத்யாயம்.)

(சென்னை, கேசரி அச்சுக்கூடத்தின்
1929, 1930-ம் வருஷங்களின் பதிப்பு.)

(சைவத்திருவாளர், காழி, பி. அகோரம் பிள்ளை அவர்கள்.)

அந்தத்தீர்த்தமானது பெரிய மஹாத்மாவும் ஜமதக்நி குமாரருமான பரசுராமரால் உண்டுபண்ணப்பட்டது. பரசுராமராலே அந்த இடத்தில் க்ஷத்திரியர்களைக் கொன்று அவர்களுடைய ரக்தத்தால் நிறைத்து ஐந்து மடுக்கள் அமைக்கப்பட்டன. அந்த இரத்தத்தால் பித்ருக்களும், ப்ரபிதாமகர்களுமான அனைவரும் த்ருப்தி செய்யப்பட்டார்கள். பிறகு அந்தப் பித்ருக்கள் ப்ரீதியடைந்து ராமரைப்பார்த்து, 'ராம! ராம! உன்னுடைய இந்தப் பித்ரு பக்தியினாலும் விக்ரமத்தினாலும் உன்விஷயத்தில் த்ருப்தியடைந்தவர்களாக இருக்கிறோம். வரத்தைக் கேட்பாயாக' என்று வினவினார்கள். பரசுராமர், இருகைகளையும் குவித்துக்கொண்டு, ஆகாயத்தில் நிற்கின்ற பித்ருக்களைப் பார்த்து, 'நீங்கள் என்விஷயத்தில் ப்ரீதியுள்ளவர்களாகில்மீண்டும்தவத்தையும்நல்லவேதாத்தியயனத்தையும் விரும்புகிறேன். மேலும், நான் கோபவசப்பட்டு க்ஷத்திரியர்களைக்கொன்ற பாவத்தினின்றும்உங்களுடையதேஜஸினால்விடுபடக்கடவேன். என்னால்உண்டுபண்ணப்பட்டரக்தமடுக்களும்பூமியில்பிரசித்தியுள்ளதீர்த்தங்களாகவேண்டும்' என்று வேண்டிக்கொண்டார். பித்ருக்கள் ராமரைப்பார்த்து, 'பித்ரு பக்தியினால் உன்னுடைய தவமானது மீண்டும் விசேஷமாக விருத்தியடையட்டும். நீ கோபத்துக்கு வசப்பட்டு க்ஷத்திரியர்களைக் கொன்ற பாவத்தினின்றும் விடுபட்டுவிட்டாய். உன்னாலுண்டுபண்ணப்பட்ட மடுக்களும் தீர்த்தங்களாகும்' என்று கூறினார்கள். ராமருடைய பித்ருக்கள் மறைந்தார்கள். மகாத்மாவான பார்க்கவருடைய ராமஹ்ரதங்கள் இப்படிப்புண்யமானவை.

விபூதி மகிமை.

முற்காலத்தில் மங்கணகர் என்கிற ரிஷி தம்முடைய கையில் தர்ப்பத்தின் நுனியினால் அறுக்கப்பட்டார். அதினின்று சாகரஸம் (கீரை அல்லது காய்கறிகளின் சாறு) பெருகியது. அந்த மங்கணகர் சாகரஸத்தைக் கண்டு களிகொண்டு கூத்தாடினார். அவர் கூத்தாடினபோது ஸ்தாவரமும் ஜங்கமுமான இருவகைப்பொருள்களும் அந்தரிஷியினுடைய தேஜஸினால் மயக்கப்பட்டுக் கூத்தாடின. தேவர்களும் மகரிஷிகளும் மஹாதேவரை 'தேவரே! இந்தரிஷி கூத்தாடாமலிருக்கும்படி தேவரீர் செய்யக்கடவீர்' என்று ரிஷியின் நிமித்தம் விண்ணப்பம் செய்தனர். மகாதேவர் அந்தரிஷியை அடைந்து, 'உனக்கு இப்பொழுது ஸந்தோஷத்திற்குக் காரணம் யாது? எதற்காக நர்த்தனம் செய்கிறாய்?' என்று வினவினார். ரிஷி 'என்னுடைய கையிலிருந்து சாகரஸம் பெருகுவதை நீர் பார்க்கவில்லையா? அந்தச்சாகரஸத்தை நான் பார்த்து அதிக ஸந்தோஷத்தோடு கூத்தாடுகிறேன்' என்று விடையளித்தார். மஹாதேவர் அந்த ரிஷியைப் பார்த்து, 'பிராம்மணா! நான் ஆச்சரியத்தை அடையவில்லை. என்னைப்பார்' என்றார்.

இவ்வாறு கூறிவிட்டு மஹாதேவர் விரல்நுனியினால் தமது சட்டைவிரலைத் தட்டினார். அந்தக்காயத்திலிருந்து பனிக்கொப்பான பஸ்மம் வெளிவந்தது. ரிஷியானவர் அதைப்பார்த்து வெட்கி அவருடைய இரு கால்களிலும் தண்டனிட்டுத் தேவரான ருத்ரரைக் காட்டிலும் வேறொன்றைப் பெரிதும் மிகச்சிறந்ததுமாக எண்ணவில்லை, அவர், ‘சூலாயுதத்தைத் தரிப்பவரே! தேவரீர் தேவாஸுரர்களிடன் கூடின உலகத்துக்குக் கதியாக இருக்கிறீர். மூவுலகம் முழுமையும் உம்மால் படைக்கப்பட்டது. யுக முடிவில் மறுபடியும் தேவரீரே எல்லாவற்றையும் பக்ஷிக்கிறீர். தேவர்களாலேகூட உம்மை அறிய முடியாது; என்னால் எப்படி அறியமுடியும்? தேவரீரிடத்தில் பிரமா முதலிய எல்லாத்தேவர்களும் காணப்படுகிறார்கள். நீர் எல்லாமாகவுமிருக்கிறீர். உலகங்களைப்படைப்பவரும் படைக்கும்படிசெய்பவரும் நீரே; உம்முடைய அநுக்ரஹத்தினால் எல்லாத் தேவர்களும் ஓரிடத்தினின்றும் பயமில்லாதவர்களாக வசிக்கிறார்கள்’ என்றார். இவ்வண்ணம் மஹாதேவரைத் துதித்து, ரிஷியானவர், ‘மஹாதேவரே! உம்முடைய அனுக்கிரகத்தினால் என்தவமானது குறையாமல் இருக்கவேண்டும்’ என்கிற வசனத்தை உரைத்தார். பிறகு, மஹாதேவர், மனம் மகிழ்ந்து, பிரம்மரிஷியைப் பார்த்து, ‘பிராம்மணா! என்னுடைய அனுக்கிரஹத்தினால் உன்னுடைய தவம் ஆயிர மடங்காக வளரட்டும். மஹாமுனியே! உன்னுடன் கூடவே இந்த ஆஸ்ரமத்தில் வஸிப்பேன்’ என்று சொன்னார். இவ்வண்ணங்கூறி, மஹாதேவர் அவ்விடத்திலேயே மறைந்தார்.

ததீசிப் பிரபாவம்.

ஸ்ரீ உ. வே. T. V. ஸ்ரீநிவாஸாசார்யரவர்கள் மொழிபெயர்த்தது
(வனபர்வத்து 99-வது அத்யாயத்திரட்டு.)

தேவர்கள்முற்காலத்தில் வ்ருத்ரனைக்கொல்வதில் முயற்சியைச் செய்தார்கள்; இந்திரனை முன்னிட்டுக்கொண்டு பிரம்மாவை அடைந்தார்கள். பிரம்மதேவர் அவர்களைப்பார்த்து, தேவர்களே! வ்ருத்ரனைக்கொல்லத்தக்க உபாயத்தைச் சொல்லுவேன். ததீசர் என்று ப்ரசித்திப்பெற்ற உதாரபுத்தியுள்ள ஒரு மஹரிஷி இருக்கிறார். நீங்கள் அவரை மூன்று உலகத்துக்கும் நன்மைக்காகத் தேவரீருடைய எலும்புகளைத் தரக்கடவீர் என்று சொல்லவேண்டும். அவர் சரீரத்தை விட்டு எலும்புகளைக் கொடுப்பார். அவருடைய எலும்புகளால் வஜ்ராயுதமானது செய்யப்படவேண்டும். இந்திரன் அந்த வஜ்ராயுதத்தால் வ்ருத்ரனைக் கொல்லுவான். விரைவாகச் செய்யக்கடவீர்’ என்று சொன்னார். தேவர்கள் நாராயணரை முன்னிட்டுக்கொண்டு ததீசருடைய அஸ்ரமத்தை நோக்கிச் சென்றனர். அந்தத் தேவர்கள் காந்தியுள்ளவரும் ஜ்வலிப்பவருமான ததீசரைக் கண்டார்கள். தேவர்கள் எல்லோரும் அவருடைய கால்களில் நமஸ்கரித்து வரத்தை வேண்டினார்கள். ததீசர் தேவர்களைப் பார்த்து ‘என் தேகத்தை நானே விட்டுவிடுகிறேன்’ என்று சொன்னார். ததீசர் தம் உயிரைவிட்டார். தேவர்கள் ததீசருடைய எலும்பை எடுத்தார்கள். த்வஷ்டாவோ (அதனால்) வஜ்ராயுதத்தைச் செய்தான். புரந்தரன் அந்த வஜ்ராயுதத்தைப் பெற்றுக்கொண்டான்.

உ

இல்லிகவாப் பருவம்.

(கூடவாயில் போர்டு உயர்தரப்பள்ளி தமிழாசிரியர்,
வித்வான் திரு, மு. இரத்தின தேசிகர் அவர்கள்.)

மகளிர்தம் உடல்வளர்ச்சி நிலைக்கும், அறிவுவளர்ச்சி நிலைக்கும் ஏற்ப ஆன்றோர் வகுத்த பருவநிலைகள் ஏழாகும். அவை பேதை, பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் எனப்படும். இவற்றுள் பேதைப்பருவமென்பது: ஐந்தாண்டுமுதல் ஏழாண்டுவரையுள்ள பருவமாகும். இப்பருவப் பெண்கள் அறியாமையே மிகப்பெற்றவராய்த் தக்கவின்ன தகாதனவின்னவென்றுணரும் ஆற்றலற்றவராய்ப் பெரிதும் விளையாட்டையே மேற்கொண்டிருப்பரென்பது பற்றியே; அறிவற்றவர் என்ற பொருள்படும் பேதையர் என்ற சொல்லைப் பெறுவாராயினர்.

இனி இதனை யடுத்தெய்தும் பருவம் பெதும்பைப் பருவமாகும். இஃது எட்டாண்டு முதல் பதினோராண்டுவரையுள்ள காலத்தைப் பெறுவதாகும். இப்பருவத்தே மகளிர்தாம் அடுத்தெய்தும் மங்கைப் பருவத்திற்கேற்ற உறுப்பு வளர்ச்சிகளைப் பெறுவர். இக்கருத்தினை விளக்கவே துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள், தாமியற்றிய பிரபுலிங்கலீலை யென்ற நூலில், மாயையின் பருவவளர்ச்சியைக் கூறவந்த இடத்துத் தம் கவித்திறமைக்கேற்ப "மாயை, அரியணையமர்ந்த அரசனிறப்ப அவ்வணை மீது அவன் மைந்தனும் இளவரசன் அமர்ந்ததற்கேற்ப, பாற்பற்கள் விழுந்தவிடத்து எயிறுகள் தோன்ற, குதம்பைவளர்த்தகாதினிடையே தோடென்னும் அணி அமைய, மாரன் கண்காணிப்பில் வளர்ந்த குழற்காடு அலர் விரவிக்கட்டுற, விழிகள் சிறிதளவு நோய்நோக்கெய்த, துறவிகளாம்பறவைகள் மையல் என்கின்ற கண்ணியிற் படுதலை மெல்லமறைந்து எட்டிப்பார்க்கின்றவைகளைப் போன்று, மார்பில் இளநகில்கள் தோன்ற, கன்னிநடக்கும் நடையினைக் கற்று, கரும்பு கசக்கும் மொழியினைப்பெற்று, மைந்தர் பார்வைக் குறிப்புணர்ந்து, தன்னெழிலைக் கண்டுதானே தருக்கிப் பெதும்பைப் பருவமெய்தினள்." எனக் கூறிப்போந்தனர்.

இனி மூன்றாவதாய் வந்தெய்தும் பருவமே மங்கைப் பருவமெனப்படும். இதன் காலஎல்லை பன்னிராண்டு முதல் பதின்மூன்றாம் ஆண்டு முடிய உள்ளதாகும். இப்பருவத்தே மங்கையர் தலைப்பூப்பெய்தி இயற்கைப்புணர்ச்சிக் குரியராய் இல்லிலமைவர். பின்னர் மணவினை நிகழும். இக்காலத்தும் மகளிர் தலைப்பூப் பெய்தியபின் இற்செறிக்கப்பட்டுப் பின்னே மணம் பெறுதல் கண்கூடு. இத்தகைய வழக்கை மேற்கொண்டே இல்லிகவாப் பருவமென்பது மங்கைப் பருவமேயாம் என்பதை உணர்த்த,

பெரியபுராணம் இயற்றிய சேக்கிழாரடிகள் தாம் பாடிய காரைக்காலம்மையார் சரிதையில், அவர் மணவினைக்கு முன்னே மங்கைப்பருவத்தே இல்லிலமைவாராயினர் என்பதை உணர்த்த,

"நல்லவென உறுப்புநூ லவருரைக்கும் நலம்நிரம்பி
மல்குபெரு வனப்புமீக் கூரவரு மாட்சியினால்
இல்லிகவாப் பருவத்தில் இவர்கள்மர பினுக்கேற்குந்
தொல்குலத்து வணிகர்மகட் பேசுதற்குத் தொடங்குவார்"

எனக் கூறிச் சென்றனர். இவ்வாறே மாயையின் மங்கைப் பருவத்தைக் கூறவந்த சிவப்பிரகாச சுவாமிகளும் அவள் இற்செறிக்கப்பட்டாளென்பதை உணர்த்த,

"பாகமாகப் பொங்கியெழும் பலமேபோலப் பொங்குமெழில்
மோகமாயை தன்பருவ முன்னிமுடிவேந் தயனுமா
லாகுமாட மொன்றுபுரிந் ததன்கட்கல்வி பற்பலவும்
போகுமாதர் பலர்சூழப்போற்றி யிருப்பச் செய்தனனால்"

எனக் கூறிச் சென்றனர். ஆற்றேல் தற்கால மகளிரிற் பெரும்பான்மையோர் மேற்குறித்த வயதெல்லையில் தலைப்பூப்பெய்தாராய்க் காலங்கடந்தே தலைப்பூப் பெய்துகின்றனரே யெனின், பண்டைக்கால முதியோர் நூறாண்டுகட்கு மேற்பட்ட பருவத்தும் உயிர்வாழ்ந்திருந்து, முதுமக்கட் டாழியினும் இடப்பெற்றிருக்க, இக்காலமாந்தர் நடைவேற்றுமையானும், பழக்க வழக்க மாறுதல்களானும், உணவின் மாறுதல்களானும் இளமையிலேயே முதுமை எய்தப்பெற்று, வலிமைகுன்றி ஐம்பதிற்கு முற்பட்ட பருவத்திற்றானே மடிவதற்கொப்ப, தற்கால மகளிரும் மேற் குறித்த காரணங்களால் வலிகுன்றி உறுப்பு வளர்ச்சியைப் பெறாராய் மங்குகின்றனர் எனக்கூறி விடுக்க.

மேற்கூறியாங்கு, சேக்கிழாரடிகள் கூறிப்போந்த "இல்லிகவாப் பருவம்" என்பது மங்கைப் பருவமேயாம் என்பதை உணராராய்ச் சிலர் மயங்கிப் பெதும்பைப் பருவமென்பர். அது பொருந்தாதென்பதை ஆராய்வாம்.

முற்கூறியவற்றால், பெதும்பைப் பருவம் உறுப்பு வளர்ச்சிக்குரிய பருவமாமென்றும், மங்கைப்பருவத்தே மகளிர் தலைப்பூப்பெய்தி மணத்திற் குரியராகின்றனரென்றும் கண்டாம். பண்டை நாள் நல் வாழ்வு நடாத்தி இன்புற்றிருந்த நம் தமிழ் மூதாதையர் அகத்தமிழ் இலக்கணத்திற்கேற்ப மணமுறையை மேற்கொண்டொழுகினர். அக்கால வழக்குப் படி ஓர் தலைவன் தனக்கொத்த கல்வி, நலன் முதலியன நிரம்பப்பெற்ற ஓர்

தலைவியை, இயற்கைப் புணர்ச்சி, இடந்தலைப்பாடு, பாங்கற்கூட்டம் முதலியவற்றால் அடைந்து, பின்னர் மணந்தனனென்பது அகத்தமிழ்நூல்களான் நாம் அறியக்கிடக்கும் உண்மையாகும். மேற்கூறியாங்கு இயற்கைப் புணர்ச்சியில் ஓர் தலைவன் தன் தலைவியை முதற்கண் கூடுவது அவள் தலைப்பூப் பெய்திய பின்னரேயாம் என்பது வெளிப்படை. எனவே தலைவன் தலைவியைக் கூடும் பருவம், பெதும்பைப்பருவத்தின் ஈற்றெல்லையாகிய பதினொன்று என்னும் வயதைக் கடந்த மங்கைப் பருவமேயாகும்.

இவ்வுண்மையினை மனத்தைக் கரைத்து மலத்தைக் கெடுக்கும் வாசகத்தினை யருளிய மணிவாசகரின் அருமை வாக்கால் உரைக்கப்பெற்ற திருக்கோவையாரைக்கொண்டு உணரலாம். மணிவாசகப்பெருமான் திருக்கோவையாரில் இயற்கைப் புணர்ச்சி என்ற பகுப்பில், புணராத முன்னின்ற வேட்கையன்பு, புணர்ந்த பின்னும் அப்பெற்றியே நின்று வளர்ந்து சேறலைக்கண்ட தலைமகன் இருவயினொத்தலை,

"உணர்ந்தார்க் குணர்வரியோன் றில்லைச்சிற் றம்பலத்தொருத்தன்
குணந்தான் வெளிப்பட்ட கொவ்வைச் செவ்வாயிக் கொடியிடைதோள்
புணர்ந்தாற் புணருந்தொறும் பெரும்போகம்பின் னும்புதிதாய்
மணந்தாழ் புரிகுழலா ளல்குல்போல வளர்கின்றதே"

என்று கூறுவதாய்க் குறித்தருளினர். இவ்வருமைக்கோவைத்துறைக்கு உரைவகுக்கப்போந்தபேராசிரியர் "மணந்தாழ் புரிகுழலாள் அல்குல்போல வளர்கின்றதே என்ற அடிக்கு விசேட உரையாக" வளர்கின்றதென்றமையிற் புணர்ந்ததனாற்பயனென்னையெனின், புணராத முன்னின்ற வேட்கை புணர்ச்சிக்கட் குறைபடும். அக்குறை பாட்டைக் கூட்டத்தின் கட்டமிற்பெற்ற குணங்களினாய அன்பு நிறைக்கும். நிறைக்க எஞ்ஞான்றும் ஒரு பெற்றித்தாய் நிற்குமென்பது. அல்குல்போல வளர்கின்றதென்றவழி ஒரு காலைக் கொருகால் வளருமென்றாரல்லர். என்னை குறைபாடுள்ள தற்கன்றே வளர்ச்சியுண்டாவது. அல்லதூஉம் எஞ்ஞான்றும் வளருமெனின் அல்குற்கு வரம்பின்மையும் தோன்றும். மற்றென்னை கருதியெனின், இயற்கைப் புணர்ச்சி புணர்கின்ற காலத்து இவள் பதினோராண்டும் பத்துத் திங்களும் புக்காளாகலின் இவளது அல்குல் இலக்கணக்குறைபாடின்றியே வளராநின்றது. வளர்ந்து பன்னீராண்டு நிரம்பினால் ஒரு பெற்றியே நிற்கும். அதுபோல இவன் காதலும் உள்ளமுள்ளளவு நிறைந்து பின்னைக் குறைபாடின்றி ஒருபெற்றியே நிற்குமென்பது" எனக் குறித்துப் போந்தார்.

எனவே மேற்கண்ட பேராசிரியர் கருத்தை நோக்கும்போது, பெண்கள் இயற்கைப் புணர்ச்சிக்கு உரியராவது பதினொன்றாம் வயதைக்கடந்த மங்கைப்பருவத்திற்றான் என்பது விளங்குகிறது. சேக்கிழாரடிகளும் இவ்வுண்மையினை உணர்ந்தே புனிதவதியாரின் இல்லிகவாப் பருவமாகிய மங்கைப் பருவத்தே குலவணிகர் மகட்பேசத்தொடங்கி மணவினை முடித்தனர் எனக் கூறிச்சென்றனர். இல்லிகவாப் பருவமென்பதைப் பெதும்

பைப் பருவமென்றேகொண்டு அப்பருவத்தேதான் மணமுடித்தனர் எனக்கொள்ளின், அவ்வடிகளே அவ்வம்மையாரின் பின்சரித நிகழ்ச்சியைக்கூறுவதை நோக்கின் அதுபொருந்தாதெனப் புலப்படும். எவ்வாறெனில் குலவணிகர் மகட்பேசத் தொடங்கியபின், நாகையில் உள்ள நிதிபதிமைந்தன் பரமதத்தனுக்கு, அப்புனிதவதியாரை மணம்பேசி மணவினையை முடித்தனர். பின்பு தனதத்தன் தன்குடிக்கோர் அரும்புதல்வியாகிய புனிதவதியாரைப் பிரிந்திருக்கப் பொறாளாய்க் காரைக்காலிலேயே அணிமாடம் ஒன்றமைத்துப்புனிதவதியாரையும் பரமதத்தனையும் மனையறம் படுத்தினன்.

"மங்கலமா மணவினைகள் முடித்தியல்பின் வைகுநாள்
தங்கள்குடிக் கரும்புதல்வி யாதலினால் தனதத்தன்
பொங்கொலிநீர் நாகையினிற் போகாமே கணவனுடன்
அங்கணமர்ந் தினிதிருக்க அணிமாடம் மருங்கமைத்தான்."

"மகட்கொடையின் மகிழ்சிறக்கும் வரம்பில்தனம் கொடுத்ததற்பின்
நிகர்ப்பரிய பெருஞ்சிறப்பின் நிதிபதிதன் குலமகனும்
தகைப்பில் பெருங்காதலினால் தங்குமனை வளம்பெருக்கி
மிகப்புரியுங் கொள்கையினில் மேம்படுதல் மேவினான்."

என்ற இவ்வரலாற்றால் உணரலாம். இவ்வாறு மணவினைக்குப்பின் தலைவனும் தலைவியும் தனியிருந்து மனையறம் புரிந்தனரெனின், அம்மனையறம் பெதும்பைப் பருவத்திற்றானே எவ்வாறு நிகழ்த்தப்பெறும் என்பது சிந்திக்கற்பாற்று. எனவே இல்லிகவாப் பருவமென்பது மங்கைப் பருவமேயாம் என்பதும், அதுவே மணவினைக்குப் பின்மனையறம் புரிதற்கு ஏற்றதென்பதும் விளங்கும். இப்பர், கவிப்பர், பெருங்குடியர் என்ற வணிகருள் தலைசிறந்தோராய பெருங்குடி வணிகர் இயல்பு இம்மங்கைப் பருவத்திற்றானே மகளிரை மணந்து மனையறம் புரிதலாகுமென்பது "பெருங்குடி வாணிகன் பெருமட மகளாகிய" கண்ணகி வரலாற்றைக் கூறவந்த இளங்கோவடிகள், அக்கற்பரசியின் மணப்பருவத்தை,

அதனால்,

நாகநீ ணகரொடு நாகநா டதனொடு
போகநீள் புகழ்மன்னும் புகார்நக ரதுதன்னில்
மாகவா னிகர்வண்கை மாநாய்கன் குலக்கொம்பர்
ஈகைவான் கொடியன்னாள் ஈராறாண் டகவையாள்"

எனக் கூறிப்போந்தார். இதிலிருந்து கண்ணகி மணவினைக் காலத்தே பன்னிரண்டுக்கு உட்பட்ட வயதையுடையளாய் இருந்தாளென்பது புலனாகின்றது. இவ்வடிகளுக்கு உரைவகுக்கப் போந்த அடியார்க்கு நல்லாரும் "சுவர்க்கம் பவணம் என்னும் இவற்றிற்குள்ள புகழும் போகமும் நிலைபெற்ற அப்புகாரென்னும் நகரின்கண் மழைபோல் வழங்கும் கையையுடைய மாநாய்கனுடைய குலத்திற்றோன்றிய கொம்புங்கொடியும் போல்வாள் பன்னீராண்டிற்குட்பட்ட பிராயத்தளாயினாளென்க" எனக் கூறிப்போந்தார். அன்றியும் மேற்கூறிப்போந்த சேக்கிழாரடிகளின் கருத்துக்கிணங்க, இளங்கோவடிகளும் கண்ணகியின் பிற்சரிதத்தைக்கூறுமிடத்து மங்கலவாழ்த்துப்பாடலுக்குப் பின்னே, மனையறம்படுத்த காதையை வைத்துக்கோவலனும் கண்ணகியும் கூடிக்களித்து மனையறம் புகுந்ததை,

மாசறு பொன்னே வலம்புரி முத்தே
காசறு விரையே கரும்பே தேனே
அரும்பெறற் பாவாய் ஆருயிர் மருந்தே
பெருங்குடி வாணிகன் பெருமட மகளே
மலையிடைப் பிறவா மணியே என்கோ
அலையிடைப் பிறவா அமிழ்தே என்கோ
யாழிடைப் பிறவா இசையே என்கோ
தாழிருங் கூந்தற் றையால்........"

என்ற அடிகளால் விளக்கி மங்கைப்பருவத்தின் இயல்பினைத் தெள்ளிதின் விளக்கிப்போந்தார்.

அற்றேல் "ஈராறாண்-டகவையாள்" "பன்னீராண்டிற் குட்பட்ட பிராயத்தளாயினாளென்க" என்ற அடிகளை நோக்கும்போது, பன்னிரண்டிற் குட்பட்ட பிராயம் என்பது பெதும்பைப்பருவமாகாதோ எனின் ஆகாது. எவ்வாறெனில் மேற்கூறியாங்கு பெதும்பைப் பருவம் உறுப்பு வளர்ச்சிக்குரிய பருவமாகலானும், பெதும்பைப் பருவத்தின் ஈற்றெல்லையாகிய பதினொன்றென்னும் வயதைக் கடந்த பின்னரே மங்கையர் தலைப்பூப்பெய்தி இயற்கைப் புணர்ச்சிக்கு உரியராவரென்பது பேராசிரியர் உரையானே அறியக்கிடத்தலானும், 'அகவையாள்' என்பது, தொடங்கிய மங்கைப் பருவத்தையே உணர்த்திற்றென்று துணிதல் வேண்டும். ஒருவருக்கு நாம் வயதைக்கணக்கிடும்போது அவரது நிரம்பிய ஆண்டின் பின்உள்ள மாதங்களைத் தள்ளி நிரம்பிய ஆண்டையே வயதாகக் கூறுதல் வழக்கன்று. எவ்வாறெனில் ஒருவருக்குப் பதினோராண்டும் பத்துத்திங்களும் சென்றிருப்பின்; அவர் பிராயத்தைப் பன்னிரண்டென்றே கூறுதல் மரபு. ஒன்றின் கூறுகளாகிய $\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{3}{4}$, என்பன அவ்வொன்றிற்குரியவைகளேயாம். $1\frac{1}{4}$, $1\frac{1}{2}$, $1\frac{3}{4}$ என்று கூறும்போது ஒன்றிற்கு மேற்பட்ட கூறுகள் ஒன்றிற் கடுத்த இரண்டிற்குரியவைகளேயாம். இதுநோக்கியே பேராசிரியரும் "மணந்தாழ் புரிகுழலாள் அல்குல்போல வளர்கின்றதே" என்ற அடிக்கு உரைவகுத்தபோது தலைமகள் பதினோராண்டும் பத்துத் திங்களும் உடையாள் எனக் கூறிப்பெதும்பைப் பருவத்தின் ஈற்றெல்லையாகிய பதினொன்றென்னும் வயதைக்கடந்த பின்னரே மங்கைப்பருவம் எய்தும் எனக் குறிப்பால் உணர்த்திச் சென்றார்.

மேலேகண்ட காரணங்களால், பெண்டிரின் பெதும்பைப் பருவமே அவர் அடுத்தெய்தும் மங்கைப் பருவத்திற்கேற்ற உறுப்பு வளர்ச்சியைப் பெறும் பருவமென்பதும், அது எட்டுமுதல் பதினொன்றென்கின்ற வயதெல்லையை உடையதென்பதும் பதினொன்றிற்கு அடுத்ததிங்கள் தொடங்கிப் பதின்மூன்றின் ஈற்றுத்திங்கள் வரை உள்ள ஈராண்டே மங்கைப் பருவத்தின் காலமென்பதும்; அப்பொழுதே மகளிர் தலைப்பூப்பெய்தி இயற்கைப் புணர்ச்சிக்கு உரியராகின்றனரென்பதும், இற்செறிக்கப்படுவது அப்பொழுதே நிகழும் என்பதும், அவ்வாறு இற்செறிக்கப்பெறுவதாற்றான் மங்கைப்பருவம் "இல்லிகவாப் பருவமென்று" சேக்கிழாரடிகளால் கூறப்பட்டிருக்கிறதென்பதும் தெள்ளிதின் விளங்குதல் காண்க.

ஆணவமலமுள்ளபோதே மாயை கன்மங்களுமுண்டு.

(சுதுமலை சிவஸ்ரீ ச. பொன்னுஸ்வாமிக்குருக்களவர்கள்.)

ஆன்மாவுள்ளவன்றே ஆணவமலமுமுண்டு. அதுவுள்ளவன்றேமாயை கன்மங்களும் உள்ளனவாம். அதுபற்றியே 'உயிருண்டாவேயுளதுமலம், மலமுளதாவொழிந்தவெல்லாம் நெல்லின் வருதவிடுமிபோல் அநாதியாக நிறுத்திடுவர்', எனச் சொல்லப்பட்டது. மும்மல சம்பந்தமும் அநாதியாகவுள்ளதாயினும் ஆணவமல சம்பந்தத்திற்கும் மாயை கன்மங்களின் சம்பந்தத்திற்கும் வேறுபாடுண்டு. ஆணவமல சம்பந்தம் சகசம் மாயாகன்ம சம்பந்தம் ஆகந்துகம். மும்மலமும் அநாதியாக இவ்வேறுபாடு வந்தது எதற்காகவோ வென்றால், உயிரின் பிரதானசம்பந்தம் ஆணவமலமும் அதன் வழித்தான சம்பந்தம் மாயை கன்மங்களுமாகலின், அவ்வேறுபாடு தோன்றவே சகசமும் ஆகந்துகமும் எனச் சொல்லப்படுகின்றது. அன்றியும், ஆணவமலம் காரணரூபமாக நின்று கேவலத்தினும் சகலத்தினும் பந்தஞ்செய்யும். மாயை கன்மங்கள் காரியப்பட்டுச் சகலத்தின் மாத்திரமே பந்தஞ் செய்யும். மாயை கன்மங்களிலும் ஆணவமல சம்பந்தம் அந்தரங்கவுரிமையுடையதுமாம். இன்னும் பலவேறுபாடுகளுள்ளன.

கன்மவிளைவுக்குக்காரணம் சரீரமும், சரீரவரவுக்குக்காரணம் கன்மமும் என்று ஏற்படுகின்றது. இப்படி ஒன்றுக்கொன்று காரணமாயிருக்கும்போது இந்த இரண்டில் முதலிற் காரணமாவது எது வென்று சந்தேகமுண்டாகின்றது. சரீரமே முதலில்வர அதனாற் கன்மஞ்செய்யப்பட்டதென்னில், கன்மமில்லாமற் சரீரம் எப்படியுண்டாகுமென்னும் வினாவுண்டாகும். அதற்கஞ்சிக் கன்மம் முதலில் உளதாக அதனாற் சரீரம் உண்டாயிற்றெனா விடை சொல்லில் சரீரமில்லாமற் கன்மம் வந்தவகையெப்படியென்னும் வினாவரும். அதனால் மேலும் மேலும் சந்தேகமுண்டாகித் துணிவு பிறக்கமாட்டாது. இப்படி வருவது தாலபீச (பனங்கொட்டை) நியாயமாம். அதாவது பனைமுந்தியதோ கொட்டைமுந்தியதோ வென்று அறியத்தொடங்கினால், அந்த இரண்டில் எது முந்தியதென்று சொல்லிக்கொள்ள இயலாமல் மயக்கத்தைத் தருமன்றோ. அப்படியே கன்ம சரீர விஷயமாம். இதற்கோர் சமாதானங் கூறவேண்டின்,

> உடற்செயல் கன்மமிந்த வுடல்வந்த வாறே தென்னின்
> விடப்படு முன்னுடம்பின் வினையிந்த வுடல்வினைக்குந்
> தொடர்ச்சியா லொன்றுக்கொன்று தொன்று தொட்டனாதிவித்தி
> னிடத்தினின் மரம்மரத்தின் வித்தும் வந்திடுமாபோல்''

''அந்த இரண்டிற்கும் மூலமாகிய சூக்குமவுடம்பு வேறுண்மையின் என்றுரைத்தார்.

(தொடரும்

செங்குட்டுவன் தமிழ்மொழிப் பற்றும் தாய்நாட்டுப் பற்றும்.

(தில்லைச் சாந்தைத் தமிழ்க்கல்லூரி மாணவர்,
திரு. த. உலகநாதனென்னும் நிலத்தலைவர் அவர்கள்.)

செந்தமிழ் நாட்டையாண்ட முடியுடை மன்னர் மூவரும் தமிழ்நாட்டைக் கோமுறை கோடாது அரசாண்டுவந்தனர். அத்துடன் நில்லாது அமிழ்தினுமினிய நந்தமிழ் மொழியைத் தம்முயிரினும் இனிதாய்ப் பாராட்டி வளர்த்து வந்தனர். அத்தொன்மைச் சேரர் தலைசிறந்து விளங்கினர் என்பது பிற்காலத்தே அன்னோர் வரலாறுகளால் அறிந்து பாராட்டப்படுகின்றது. சேரர்களுள் கடைச்சங்கநாளில் தமிழ்நாட்டுத் திலகமெனத் திகழ்ந்தவன் சேரன் செங்குட்டுவன். இவனே ''நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்னோர்மணி ஆரத்''தை நம் தமிழன்னைக்களித்த இளங்கோவடிகளாரின் அண்ணனுமாவான்.

ஒவ்வொரு நாட்டினரின் மொழிப்பற்றே அவ்வந்நாட்டினரின் நாட்டுப் பற்றுக்கும் காரணமாகும் என்பது அறிஞர்கள் ஒப்ப முடிந்த கொள்கையாகும். ''தாய்மொழிப் பற்றில்லாதவன் தாய் நாட்டுப்பற்றில்லாதவன்'' என்பது பைரன் என்னும் ஆங்கிலக் கவியின் அமுதமொழி. எனவே தமிழ்மொழிப்பற்று மிக்கவரே தமிழ்நாட்டுப்பற்றுமிக்கவர் என்பது மலையிலக்கு.

செங்குட்டுவன் தமிழ்மொழிவளர்ச்சிக்குப் பெருந்தொண்டு புரிந்தானென்பது அவன் தன் அரசியலில் பல செந்நாப் புலவர்களைப் பாராட்டி ஓம்பி வந்ததால் அறியக்கிடக்கிறது. பரணர், மதுரைக் கூலவாணிகன் சாத்தனார்முதலிய அறிஞர்பலருடன் அளவளாவி செந்தமிழ் நலன் நுகர்ந்து சிறப்புற்று விளங்கினான். இவ்விருநரும் துறவியுமாய இளங்கோவடிகள் தம் நாவலத்தால் அரசர்க்கு அமைச்சரே போலநின்று தமிழ்த்தொண்டு புரிந்தார். இன்று தமிழன்னையின் அருங்கலனை விளங்கும் சிலப்பதிகாரத்தையும் மேகலையாகிய மணிமேகலையையும் தமிழன்னைக்கு அளித்தவர்கள் இளங்கோவடிகளும் சாத்தனாருமேயாவர். இவ்விரு பெரும் புலவர்களும் செங்குட்டுவன் காலத்திய செந்நாப்புலவர்களோ

யாவார்கள். புலவர்களின் பெருமையுணர்ந்து அன்னோர்க்குப் பரிசு முதலியன நல்கிப் போற்றிவந்த புரவலர்களுள் செங்குட்டுவனும் சிறந்தவனாவான்.

இத்துணைத் தமிழ்ப்பற்றுமிக்க நம்சேரர் பெருந்தகை நாட்டுப்பற்று மிக்கவன் என்பதற்கையமுண்டோ? செங்குட்டுவன் காலத்து, தமிழ் என்ற சொல்லே மொழிக்கும் மக்களுக்கும் வழங்கப்பெற்றது. கண்ணகியின் கற்புமாண்பைச் சாத்தனார் வாயிலாகச் செங்குட்டுவன் கேட்டு வியந்தான். அம்மாபெருங் கற்பரசிக்கு இமயக் கல்லால் படிவஞ்சமைத்துத் தன்னாட்டில் வழிபாடு புரிய விழைந்தான். அதுபோது மற்றொரு செய்தியும் அவன் காதுக்கெட்டியது. அஃதாவது இமயத்தினின்று வஞ்சியிற்போந்த தாபதர் சிலர் குட்டுவனை நோக்கி, "வேந்தர் வேந்தே! வடநாட்டரசனான பாலகுமரன் மக்களாகிய கனகன் விசயனுள்ளிட்ட ஆரிய மன்னர் பலரும் தம் நாட்டில் நடந்த சுயம்வரம் ஒன்றில்,

'தென்றமிழ் நாடாளும் வேந்தர் செருவேட்டுப் புகன்றெழுந்து
மின்றவழு மிமயநெற்றியில் விளங்குவில்புலி கயல்பொறித்தநாள்
எம்போலும் முடிமன்னர் ஈங்கில்லை போலும்'

என்று தமிழ் மன்னர்களை இகழ்ந்துரைசெய்தனர்" என்றனர். அதுகேட்ட செங்குட்டுவனுக்கு ஆற்றொணாச் சீற்றம் உண்டாயிற்று. உடனே தம்மை இகழ்ந்த காவா நாவினராய கனக விசயரையும் அவரைச் சார்ந்த பிறவடவரசர்களையும் ஒறுப்பதென முடிவு செய்தான். குட்டுவன், அத்தாணியிலிருந்த அறிஞர்களை நோக்கிப் பின்வருமாறு கூறலாயினான்:—

"வடவாரியர் கூறிய இழிமொழி நம்பால் தங்குவதாயின் அஃது சேரராகிய நமக்கேயன்றிச் சோழபாண்டியர்க்கும் இழிவைத் தருவதாகும். தமிழாற்றலை இழித்துரைத்த அவ்வடவரைவென்று அன்னோர் முடித்தலையில் கண்ணகிப் படிவஞ் சமைத்தற்குரிய கற்கொணரக் கடவேன். அங்ஙனஞ் செய்யாது வறிதேவாளொடு மீளுவனாயின் ஒன்னாரை அடக்காது என்னாட்டுக்குடிகளுக்கு இன்னல் விளைத்த கொடுங்கோன் மன்னனாவேன்."

இவ்வாறு செங்குட்டுவன் கூறிய நெடுமொழியை (வஞ்சினத்தை) அவன் வாக்காக,

"அமையா வாழ்க்கை அரசர் வாய்மொழி
நம்பா லொழிகுவ தாயி னாங்கஃ
தெம்போல் வேந்தர்க் கிகழ்ச்சியுந் தரூஉம்
வடதிசை மருங்கின் மன்னர்தம் முடித்தலைக்
கடவு ளெழுதவோர் கற்கொண் டல்லது
வறிது மீளுமென் வாய்வா ளாகிற்
செறிகழல் புனைந்த செருவெங் கோலத்துப்
பகையரசு நடுக்காது பயங்கெழு வைப்பிற்
குடிநடுக் குறூஉங் கோலே னாகென"

என்று இளங்கோவடிகள் வளம்பட மொழிவர். இங்ஙனஞ் சீற்றங்கொண்ட செங்குட்டுவனைத் தேற்ற எண்ணிய ஆசான் (புரோகிதன்) "மன்ன! வடவரசர் சோழபாண்டியரையே இகழ்ந்தனர். வெற்றிவேந்தராய நம்மை இகழ்ந்தவரல்லர். ஆகையால் நம் சீற்றம் தணிவதாகுக" என்றான். அதற்குள் நிகழ்வது கூறவல்ல நிமித்திகனாகிய மௌத்திகன், "வெந்திறல் வேந்தே! வடநாட்டில் நீவிர் வெற்றி பெறுவதற்குரிய காலம் இதுவே. எட்டுணையும் காலந்தாழ்த்தாது உடனே போருக்குப் புறப்படுவீராக" என்றான்.

தீயினாற் சுட்டபுண் உள்ளாறும்; நாவினாற் சுட்டவடு என்றும் ஆறாதல்லவா? ஆரியமன்னர்மேல் சீறிய செங்குட்டுவன் மௌத்திகன் சொல்லைக்கேட்டவுடனே தன்வாளையும் குடையையும் நல்ல வேளையில் வடதிசைபெயர்த்து வைத்து நாட்கொள்ளும்படி செய்தான். மறுநாள் திரண்ட சேனையோடு சென்று வடவரசர்களோடு பொருதான். போரில் வடவரசர் பலரும் புறங்கொடுத்தோடலாயினர். தமிழாற்றலுக்குத் தம் ஆற்றல் ஒரு சிறிதும் பற்றாததுகண்ட கனகவிசயர் தம் தேர்வீரர்கள் நாற்றுவரொடு செங்குட்டுவனிடம் சிக்குண்டனர்.

ஆரியப்படையை வெல்லுதல், பத்தினிப் படிவம் சமைத்தற்குரிய இமயக்கல்லைக் கனகவிசயர் தலையிற்கொண்டு செல்லல் ஆகிய இவ்விரண்டு வினைகளுள் முதற்செயலை முடித்த குட்டுவன், பத்தினிக் கடவுட்குரிய சிலையை இமயத்தினின்று எடுப்பித்த பின்னர் அதனை, தன்னை எதிர்த்த கனகவிசயரது கதிர்முடிமேலேற்றிக் கங்கையில் நீராட்டித் தூய்மை செய்தான். பின்னர் பற்பல

வெற்றிச் சின்னங்களுடன் நானிலம் போற்றும் மேனிலையோடு தன்னிலைநகராய வஞ்சிமூதூரடைந்தான். ஆண்டு கனகவிசயர்தம் முடித்தலையில் கொண்டுவந்த பத்தினிச் சிலைக்குக் கடவுண்மங்கலம் (பிரதிஷ்டை) செய்து தன் இரண்டாவது கருத்தையும் முற்றுவித்துக்கொண்டான்.

இங்ஙனம், தமிழ்வேந்தர்கள் இமயத்தில் தம் இலாஞ்சனைகளாகிய (முத்திரை) வில் புலி கயல் பொறித்தனரென்ற பெருமையை வடவரசர் சிலர் இழித்துக் கூறியதன் பொருட்டுச்சீற்றங்கொண்டு, அவ்வேந்தரைப் போரில்வென்று அப்பெருமை தமக்கும் உண்டென்பதைப் புலப்படுத்திய செங்குட்டுவன் நாட்டுப்பற்று மிக்கவன் என்பதற்கு இதனினும் வேறு சான்று வேண்டுமோ? மேலும், அவன் தன்னாட்டுக் குடிகளிடம் காட்டிய பேரன்பிற்கெல்லையில்லை. செங்குட்டுவன் வடநாடு சென்றுதிரும்பமுப்பத்திரண்டு திங்களாயின. அந்நெடுங்காலத்திலும் சேரநாட்டு மக்களிடையே குழப்பமின்றி அமைதியே நிலவி நின்றது அவன்மக்களிடம் காட்டிய பாசமகலா நேசத்தைக் குறிப்பதாகும்.

இச்சேரர் பெருமான் காலத்தே தமிழ் என்றசொல் மொழியையும் மக்களையும் குறிப்பிடுவதாயிருந்ததென்பது,

> காவா நாவிற் கனகனும் விசயனும்
> விருந்தின் மன்னர் தம்முடன் கூடி
> அருந்தமி ழாற்றல் அறிந்தில ராங்கெனச்
> சீற்றங் கொண்டிச் சேனை செல்வது"

எனச் செங்குட்டுவன் கூற்றாகவரும் தொடர்களில் தமிழர் ஆற்றல் எனற்பாலது தமிழாற்றல் என்றே இளங்கோவடிகளால் குறிப்பிடப்பட்டமையின் தெளிவாகும். மொழிப்பற்றும் நாட்டுப்பற்றும் ஒருங்கே பெற்ற நம்சேரர்பிரான் செங்குட்டுவன் காலத்தே 'நீலத்திரைக் கடலோரத்திலே நின்று நித்தம் தவம்செய் குமரியெல்லை வடமாலவன் குன்றம்' இவற்றிடையேயுமன்றி இமயம்வரையும் தமிழரது வெற்றிப்புகழ் மண்டிக்கிடந்ததென்பது வெள்ளிடைமலை. செங்குட்டுவனைப் பின்பற்றி தமிழ்மக்களனைவரும் தாய்மொழிப் பற்றும் தாய்நாட்டுப்பற்றும் மிக்கவர்களாக விளங்குவார்களாயின் அஃது நாட்டின் ஆக்கத்திற்கு உற்ற துணையாகும்.

186975

உ

வேதச் செய்யுள்

(வித்வான், திரு, நா. கனகராஜையரவர்கள்.)

பூர்வார்ஜிதமாக நாம் பெற்றிருக்கும் செல்வங்கள் வேதங்கள் ஆகும். வேதவாக்கியங்கள் எக்காலத்தில் இயன்றன, யார் இயற்றினர் என்ற ஆராய்ச்சியெல்லாம் பெரியோர்க்குரிய பணியாம். வேதவாக்கியங்கள் மறைகள் என்று பல்லாயிர ஆண்டுகளாகக் காக்கப்பட்டு வருகின்றன. பொதுமக்கள் பயின்று பயன்பெறத்தக்க பொருள்கள் பல வேதங்களில் இருப்பினும், குருபரம்பரையின் அருள்பெற்று அறியவேண்டும் என்ற எண்ணம் நம்நாட்டில் வலிமைபெற்று உள்ளது.

வேதங்களில் உபநிடதம் என்ற பகுதி ஞானநெறியை விளக்குவதாகும். உபநிடதங்கள் நூற்றெட்டு என்றுசொல்லுவதுண்டு. பத்து அல்லது பன்னிரண்டு உபநிடதங்களை குரு பரம்பரையாய் விளக்கம்பெற்றவையாம். இந்த உபநிடதங்களைப் பாஷியங்களோடும் விரிவுரைகளோடும் ஸம்ஸ்கிருத வித்வான்களிற் சிலர் முறையே பயில்கிறார்கள். ஸம்ஸ்கிருத பாஷையில் தர்க்கம், வியாகரணம், அலங்காரம், மீமாம்ஸை, வேதாந்தம் என்ற ஒவ்வொரு சாஸ்திரமும் பெரிய சமுத்திரமாக இருந்திருப்பதால் ஒரு சாஸ்திரம் பயின்றவர் மற்றொன்றையும் பயின்றிருப்பார் என்ற நியதியில்லை. அபூர்வமாகச் சில பெரியோர்கள் இரண்டு மூன்று நான்கு சாஸ்திரங்களில் வல்லவர்களாயிருக்கிறார்கள். வேதாந்த சாஸ்திரத்திற் பூரண பாண்டித்தியம் பெற்றவர் மிகச் சிலரே.

இப்படிப் பல வருஷங்கள் உழைத்து அரிய பொருள்களை உணர்ந்திருக்கும் பெரியோர்களை அடுத்து வேதாந்த விஷயந் தெரிந்துகொள்ள வேண்டும் என்று ஸம்ஸ்கிருத பாஷையில் நல்ல பயிற்சியில்லாதவர்கள் முயல்வது அபூர்வமே. அப்படியே இவர்கள் போனாலும் அந்த வித்துவான்கள் எளிதிலே போதிப்பார்கள் என்று துணிந்துகூற இயலாது. இதனால் நம்முன்னோர் ஈட்டிவைத்த அருஞ்செல்வத்தின் பெருமையையும் அருமையையும் நாம்சிறிதேனும் அறியாமல் வாழ்ந்துமடிய நேரிடுகின்றது.

நாலாயிரத் திவ்யப்பிரபந்தத்துக்கு விரிவான உரைகள் உண்டு. தேவாரத்துக்கு உரை விரிக்க யாரும் துணியவில்லை. இந்த அருட்பாக்களிலே உபநிடதக் கருத்துக்கள் ஆங்காங்கு வந்து விளக்கம் பெறுகின்றன என்பதை நுண்ணுணர்வு உள்ள பெரியோர்கள் கூறக் கேட்கிறோம். பத்திப் பெருவெள்ளத்திலே திளைத்த மகான்கள் எடுத்தாளும் கருத்துக்களைப் பொதிந்து வைத்திருக்கும் உபநிடதங்களை அறிஞர்பலரும் பயின்று உய்த்துணர்தல் தமிழில் உள்ள பல அருள் நூல்களின் உண்மைப் பொருள் தெரிந்துகொள்ளச் சிறந்ததோர் வழியாகும்.

மன வாக்குக்களுக்கு எட்டாத பொருளைப் பலபடியாக விளக்கி ஒருமுகமாக உய்த்துணரவைக்கும் உபநிடதங்களில் பொதுமக்கள் அறிந்து இன்புறத்தக்க செய்யுட்சுவை பல பகுதிகளில் உண்டு. உவமை உருவகம் முதலிய அணிகள்காவியங்களில் அமைவதுபோலவே அழகாய்ப்பொருந்தி

யுள்ளன. இந்த அணிகள் அங்கே கருதிய பொருளை விளக்குவதற்கு உதவிகளாகவே அமைந்துள்ளன. இங்ஙனம் அமைந்த பகுதிகள் பின்னே சில எடுத்துக்காட்டப்படும்.

எல்லாரும் அறியத்தக்க பொதுவான பொருள்களே உபநிடத வாக்கியங்களில் உவமைகளாக வருகின்றன. தேர், தேர்ச்சக்கரம், சக்கரத்துள்ள ஆர்கள், குதிரை, தீப்பொறி முதலியவை அடிக்கடி வரும் உவமைகளாம். உடம்பினுள் ஆன்மா அமைந்த இயல்பை விளக்கவந்த இடத்தில் ஒரு மந்திரம்,

"ஊர்வோன் ஆன்மா ஊர்தி ஊடலே
அறிவுகோல் கொள்வோன் அவன்கைப் படுஉம்
கலனையே மனமெனக் கண்டுணர்ந் திடுதியே". (கடவல்லி)

என்று கூறுகிறது. இங்கு ஆன்மா—ஊர்வோன், உடல்—ஊர்தி, அறிவு-சாரதி, கலனை—மனம் என்றஉருவகம் அமைந்த அழகு சிந்திக்கத்தக்கது.

பிரம வஸ்துவின் தன்மையை விளக்கவரும் உவமைகள் பல உண்டு. இங்கு ஓர் உருவகம் காட்டப்படும்.

"உம்பரில் வேரும் இம்பரிற் கிளைகளும்
பரவிய பழமை யரச மரமிது" (கடவல்லி)

இதைக் காட்டிலும் தெளிவாகப் பிரமப் பொருளை விளக்கல் இயலுமோ? கடலிலே கலக்கும் ஆறுகள் தம் தனித்தன்மையை இழந்து கடலாகவே மாறும் நிலைமை சில இடங்களில் உவமையாக வருவது உண்டு. பிரசினோபநிடதத்தில் ஓர் உபதேசம் வரும். அதன்கண் அமைந்த உவமை, பொருளைத் தெளிவாக விளக்குகிறது. அது வருமாறு:—

"தேருட் குடத்துச் சேரும் ஆரென
எவன்பாற் கலைகள் யாவும் இருக்குமோ
அறியத் தக்க அவனைப் புருடனை
அறிக மரணத் தவல முறாதே."

பிரமப் பொருளிலிருந்தே எல்லாம் தோன்றின என்ற உண்மையை விளக்கச் சில உவமைகள் வரும். அவையும் எளிதில் எவர்க்கும் பொருளை விளக்கும்.

"சிலம்பி தானே சிறுநூல் படைத்துத்
தனக்குளே யடக்குந் தன்மைபோல் நிலத்திற்
பூண்டுகள் தோன்றுவ போல்மனி தன்பால்
மயிர்கள் முளைத்து வளர்வுறும் செயல்போல்
அக்கரத் திருந்துமே யகிலமும் தோன்றுமே." (முண்டகம்)

இங்கு மூன்று உவமைகள் ஒரு பொருளை விளக்கத் துணை நிற்கின்றன.

பிரமானுபவத்திற்கு உரியநெறியை உபநிடத வாக்கியங்களைப்போல நன்றாய் உணர்த்துவன வேறு இல்லை. இந்த உயர்ந்த கருத்துக்கு உருவகமும் உவமையும் உதவியாய் நிற்கும் அழகைப் பலவிடங்களிற் பார்க்கலாம். பிரமம் இலக்கு ஆகும். அந்த இலக்கை எய்து பெறும் அம்பு ஜீவ ஆன்மாவாகும். பிரணவ மந்திரம் அதற்குரிய வில்லாகும் என்று ஒரு மந்திரம் கூறுகிறது. அது வருமாறு:—

"பிரணவம் வில்லாம் சரமே ஆன்மா
பிரமம் இலக்கெனப் பேசப் படுமே
குறியினோ டொன்றிய செறியுறு மம்புபோல்
ஒருமை யுணர்வினாஃ தணரத் தக்கதே." (முண்டகம்.)

ஜீவான்மாவுக்கும் பரமான்மாவுக்கும் உள்ள பேதத்தை உலகத்தார் எத்தனையோவகையாக வாதிடுகின்றனர். உபநிடத வாக்கியம் சில பகுதிகளில் ஒற்றுமை கூறும். சில பகுதிகளில் வேற்றுமை கூறும். வேற்றுமை கூறும் இம்மந்திரம் அறிஞர் நினைவுக்கு உரியதாம்.

"ஒன்றோடொன் றிணங்கி நன்றமை நட்புடன்
சிறகரால் அழகிய பறவைகள் இரண்டுதாம்
ஒருமர மதனிடை மருவிவாழ் கின்றன;
இனிமைசால் அம்மரக் கனியினை ஒன்று
தின்னும் மற்றது தின்னாது காணுமே." (முண்டகம்.)

இங்கே ஜீவான்மாவும் பரமான்மாவும் இரண்டு பறவைகள் எனப்பெற்றன. ஸம்ஸாரம் என்ற மரத்தில் இரண்டும் சேர்ந்துள்ளன. அம்மரக் கனியைச் ஜீவான்மா அனுபவிக்கிறது. பரமான்மா சாக்ஷி மாத்திரமாக விளங்குகிறது என்ற உண்மை நயமுற விளக்கப் பெற்றுள்ளது. ஜீவ பரமாத்ம ஐக்கியத்துக்கு விரோதமாக வாதிப்போர்க்குஇம்மந்திரம்ஓர் உதவியாகும்.

ஐக்கியத்தை விளக்கும் மந்திரங்கள் உபநிடதங்களில் மிகுதியாய் உண்டு. அவற்றுள் ஒன்று இங்கே தரப்படும்.

"கடலிடை யொழுகுறு நெடுநீ ராறுகள்
தம்முடை உருப்பெயர் தவிர்வன வாகி
அடங்குறும் அமைவுபோல், அறிவுடைப் பெரியோன்
பெயரும் உருவமும் பிரிவுறப் பெறுபு
திப்பிய மாகிய மெய்ப்பொருள் தன்னைப்
பெரிதினிற் பெரிய புருடனை எய்துமே." (முண்டகம்.)

இங்கும் அழகிய உவமை ஒன்று வந்துள்ளது.

பிரமவஸ்துவின் பெருமையை விளக்கும் வாக்கியம் பல உண்டு. அவை பயில்வார் அறிவின் நிலைக்கு ஏற்ப விளக்கம் தருபவையாகும். அவற்றுள் ஒன்று வருமாறு:—

"எய்தப் பெறாதே யெங்கிருந் துளனொடு
மொழிமீண் டுறுமம் முறைபெறு பிரமத்
தானந்த உருவம் அறியப் பெறுவோன்
என்றும் அஞ்சுதல் இலனும் எதற்குமே." (தைத்திரியம்)

இங்ஙனம் உயர்ந்த கருத்துக்களை எளிதில் விளக்கும் பல அழகுகள் பொருந்திய உபநிடதம் தமிழ்ப் புலவர் பலரும் பயிலத்தக்க பெருநூலாகும். வடமொழியென்று வெறுப்புத் தோன்றாமல் உள்ளம் உருகப் பயில்வார்களாயின் தமிழ் நூல்களின் அருங்கருத்துக்களை நன்கு உணர இப்பயிற்சியே துணையாக இருக்கும்.

உ

மதிப்புரை மஞ்சரி.

ஞானசம்பந்தர் நவமணி மாலையும் ஆவினன்குடி அந்தாதியும்:— இவ்விரு நூல்களும் தேவகோட்டை பாலகவி திருவாளர், வயிநாகரம்.வே. இராமநாதச் செட்டியார் தமது 23, 24-வது ஆண்டுநிறைவுகளுக்கு அடையாளமாக இயற்றியவை. இவர் ஆண்டுதோறும் ஒவ்வொரு நூலை ஆண்டவனருள்கொண்டு ஆக்கிவருகின்றனர். சொற்சுவை பொருட்சுவைகளுடன் கூடிய இவ்விரு நூல்களும் பாலறாவாயர் அருளையும் பழநியாண்டவர் அருளையும் பெறுவான் விழைந்தவையாகும். பாலறாவாயரையே பரவிப் பன்னீராட்டைப்பருவநிறைவிலிருந்தே பாக்களை யாக்கும் திறமை பெற்றுப் பாலகவிப்பட்டம்பெற்ற இவர் ஆவினன்குடி யந்தாதி ஆக்கியது 'பாடினாற் பழநியாண்டவன் மேற் பாடவேண்டும்' என்ற மூத்தப்ப செட்டியாரின் வாக்கையும் ஆதரித்ததாகும். இவர் வேண்டும் நலங்களை வேண்டியவாறருளச் சிவம் பெருக்கும் பிள்ளையாரையும் திருவாவினன் குடித் தேவையும் சிந்திக்கின்றோம்.

கந்தரலங்காரம்:— ஸ்ரீ அருணகிரிநாதசுவாமிகளருளிச் செய்த இந்நூலைத் திருப்புகழமிர்தம் ஆசிரியர் கிருபானந்த வாரியவர்கள் அரும்பதவுரையுடன் பதித்து வெளியிட்டுள்ளார்கள். கந்தரலங்கார பாராயணம் செய்யும் மெய்யன்பர்களுக்கு இப்புத்தக வெளியீடும் ஓர் விருந்துபோல்வதாகும். இந்நூற் பயன் அஞ்சுவதியாதொன்றுமில்லையென்பது இந்நூலின் 101-வது செய்யுளால் தெளிவாம். முருகன் திருப்புகழையே பரவும் கிருபானந்தவாரியவர்கள் இந்நூலை அரும்பதவுரையுடன் பதித்து வெளியிட்டதற்கு அறுமுகவன் அடியவர்கள் நன்றி செலுத்துங் கடப்பாடுடையராவர்.

தமிழர் யார்:— இது ஒரு ஆராய்ச்சி நூல். ஆசிரியர் திரு. நாரண துரைக்கண்ணன் அவர்கள் வெளியிட்டது. 112 பக்கங்கள் உள்ளது. விலை அணா 4. இதனை 10 அதிகாரங்களாக வகுத்துள்ளார். தொன்மையாகத் தமிழ்நாட்டிலுள்ளவர்களே தமிழர்களாவார்கள் என்று ஸர். பன்னீர்ச்செல்வம் அவர்கள் கூறுவதைப் பூர்வபக்கமாக்கித் தொன்மையாகத் தமிழ்நாட்டினராயுள்ளவர்களும் தமிழ்நாட்டிற் குடியேறித் தமிழைக் கற்றுய்ந்தவர்களும், அபிமானிப்பவர்களும், போற்றுபவர்களும் தமிழர்களேயாவர் என்று சித்தாந்தம் செய்யப்பெற்றிருக்கிறது. தமிழ்நாட்டிற்பிறந்து தமிழ்மொழியே தமக்கு உடன்பாடாகக் கொண்டுள்ளவர்கள் எல்லோரும் தமிழர்கள் என்று கொள்ளுவதே நேர்மையாகும்.

உ

சைவசமயம்.

(கோத்தமங்கலம் சிவஸ்ரீ ஏகாம்பரேசுவர சிவாசாரியாரவர்கள்)

சைவமென்னுஞ் சொல்லுக்குச் சிவசம்பந்தம் என்பது பொருள். அரிபிரமேந்திராதி தேவரனைவர்க்கும் இறைவனாய்ச் சிவனொருவனே மேன்மையுற்று, வேதசிவாகம புராணேதிகாசாதி சமஸ்தசாஸ்திரங்களாலும் விளக்கப்பெற்று நிற்றல்போல், அச்சிவசம்பந்த சைவ சமயமே மற்றைச் சமயங்களெல்லாவற்றுள்ளும் மேன்மையுற்று, மேற்கூறிய சாஸ்திரங்களால் விளக்கப்பெற்று, மற்றைச்சமய நூல்களொன்றாலும் பாதிக்கப்பெறாமலும் அச்சமயங்கள் மற்றைய மதங்களை ஒதுக்குதல் போல ஒன்றையும் ஒதுக்காமலும் அச்சமயங்களையெல்லாந் தனக்குச் சோபானங்களாகத் தழுவிக்கொண்டு, யாதொரு முட்டுப்பாடுமின்றி உத்தமோத்தமமாகி விளங்குவது. இதனை,

"புறச்சமய நெறிநின்று மகச்சமயம் புக்கும்புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச்சிரம, வறத்துறைகளவையடைந்து மருந்தவங்கள் புரிந்து மருங்கலைகள்பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ், சிறப்புடைய புராணங்களுணர்ந்தும் வேதசிரப்பொருளை மிகத் தெளிந்துஞ் சென்றாற் சைவத், திறத்தடைவர்இதிற் சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்." என்னும் பிரபல சுருதியாற் காண்க.

இதன் பொருள்:— சிவர்கள் பிறந்திறவாப் பெருவாழ்வாகிய மீண்டுவாராப் பேரின்பமுற்று வாழவேண்டுமானால், லோகாயதம், நால்வகைப் பௌத்தம், ஆருகதம் என்னும் புறப்புறச்சமயங்களாறையுங் கடந்து, தார்க்கிகம், மீமாஞ்சை, நானே பிரமமெனக் கொள்ளும் ஏகான்மவாதம், சாங்கியம், யோகம், பாஞ்சராத்திரமென்னும் புறச்சமயங்கள் ஆறிலும் அங்கங்குள்ள விதிப்படி நின்று, மேன்மேன் மதங்களையிகழாமல் ஒழுகி, அப்புண்ணிய பலத்தாற் பாசுபதம், மாவிரதம், காபாலம், வாமம், வைரவம், ஐக்கிய

வாதசைவமென்னும் அகப்புறச் சமயங்களாறினும், பாடாண வாதசைவம், பேதவாதசைவம், சிவசமவாதசைவம், சிவசங்கிராந்த வாதசைவம், ஈசுவர அவிகாரவாதசைவம், சிவாத்துவிதசைவமென்னும் அகச்சமயங்கள் ஆறினும் புகுந்துநின்று ஒழுகியும், ஸ்மிருதிகளாகிய தருமசாஸ்திரங்களின் வழிகளில் வேதவிருத்தமில்லாத நெறிபற்றி யொழுகியும், பிரமசரிய முதலியநான்குஆச்சிரமங்களின் விதிவழியொழுகியும், அரியதவங்கள் செய்தும், அரியகலைஞானங்கள் பல தெரிந்தும், நான்கு வேதங்களையும் ஆராய்ந்தறிந்தும், அவற்றின் பொருள் நிச்சயந் தெரிவிக்கலாற் சிறப்புடைய புராணங்களுணர்ந்தும், அம் வமயம் ஆர தெளிவாகும்படி வேதாந்தப் பொருளைப் பலமுறை யழுந்தநோக்கி யாராய்ந்து முன்பின் விரோதம் வாராமற் சமன்வயஞ் செய்தறிந்தும், இவ்வரிசையில் வழுவாது சென்றூற் சித்தாந்த சைவ மார்க்கத்திலணுகப் பெறுவார்கள். இதிற் சரியை கிரியாயோகஞ் செலுத்தியபின் சிவஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்களென்பதாம். வேதாந்தம்: வேதசிரசு உபநிடதம், எனப் பல பெயருள்ளது. அவ்வுபநிடதங்கள் பற்பலவுள்ளன. அவற்றுள்ளே சிலவுபநிடதங்கள் நாம் பிரமமென்னும் ஏகான்மவாதிகள் முதலியோர் தங்கள் கொள்கைக்குத் தக்கபடி பொருள்கொண்டு மகிழ்தற்கு இடந்தந்து நிற்றலால், அவ்வேதாந்தங்களைப் பலமுறை ஆராய்ந்தாற்றான் முன்பின் விரோதமில்லாமல் உண்மை தெளிவாகுமென்பது தோன்றவே மற்றவைகளுக்குப் போல, வேதசிரப்பொருளைத் தெளிந்தமென்று வாளாகூறாது, மிகத் தெளிந்தும் என்று அப்பிரபல சுருதி கூறிற்று. இவ்வுண்மையை உற்று நோக்கியே தாயுமானவரும், சைவசமயமேசமயம் என்றருளினர். ஆனல் மற்றவைகள் சமயங்களன்றோவெனின், அச்சைவ சமயத்திற்புகுதற்குரிய சாதகங்களாகிய சோபானங்கள் (படிவரிசைகள்) என்பதே அவர்கருத்தென்க. அதனையுமவரே,

"இயல்பென்றுந் திரியாமலியமமாதி யெண்குணமுங்காட்டியன்பாலின்பமாகிப் பயனருளப்பொருள்கள் பரிவாரமாகிப் பண்புறவுஞ் சோபான பக்ஷங்காட்டி மயலறுமந்திரஞ் சிக்ஷை சோதிடாதி மற்றங்க நூல்வணங்கமௌனமோலி யாவர்வறச் சென்னியில் வைத்து ராசாங்கத்திலமர்ந்தது வைதிக் சைவமழகிதந்தோ."

என்று விளக்கியருளினர். இன்னோரன்னபற்பல அற்புத மகிமை வாய்ந்தது சுத்தாத்துவித சித்தாந்த சைவம். இச்சைவ சமயமே மெய்ச்சமயமாம்.

வாழ்த்துரை.

சுத்தாத்துவித சித்தாந்த சைவர்களாயுள்ள நாட்டுக்கோட்டைப் பரம்பரைச் சுத்தசைவகுலத்தினராய் வாழுகின்ற தனவைசிய நகரத்தார்கள் காவிரிப்பூம்பட்டினத்துள்ள காலந் தொடுத்தே சிறிதும் மாறுபடாமற் சிவாகம முறைப்படி அதிபரிசுத்தமாகிய விபூதி ருத்திராக்ஷாதி சிவவேடமே தாங்கி, ஸ்ரீபஞ்சாக்ஷராதி ஜெபதபாதியானபரர்களாய், சர்வலோகநாயகராகிய பரமசிவனுக்கும், பரமசிவனடியார்களுக்கும் உரிய திருத்தொண்டுகளே செய்து வாழுகின்ற உத்தமர்கள்; "ஆரேனுமன்புசெயி னங்கே தலைப்படுங்காண் ஆரேனுங் காணா வரன்" என்னும் திவ்ய சுருதியைச் சிரமேற்கொண்டவர்கள்; சிவஞானபோதாதி சிவசாஸ்திரபுராண சிவசமய பரிபாலன சீலர்கள். நகரத்தார்களுக்குக் குருபீடங்களாயமைந்த கலாமடம் பாதரக்குடிமடம் என்னும் இரண்டு மடங்களில் சிலர் கலாமடத்திலும், சிலர்பாதரக்குடி மடத்திலும் ஸ்ரீபஞ்சாக்ஷரோபதேச சிவதீக்ஷைபெற்று, சிவாலய கைங்கர்யாதிகள் மேற்கொண்டு ஒன்பது சிவாலயங்களுக்கே கொத்தடிமைகளாய் உள்ளவர்கள்; சைவ சித்தாந்தத்துக்கு வேறாகிய பொல்லாத மார்க்கங்களைக் கொள்ளாதவர்கள்; ஏனைத்தேவர்கட்கும் ஆங்காங்கு பரத்துவங் கூறினும் அவை எல்லாம் அவர்களுடைய அந்தந்தப் புவனத் தலைமை நோக்கிக்கூறிய உபசாரமே என்பதை உபக்கிரம உபசங்காராதிகளால் விளக்கி, உண்மை யிதுவே யென்று முறைப்படுத் தோதுகின்ற வேதவேதாந்தங்க ளெல்லாம் பரமசிவனொருவனே கர்த்தா; அரி பிரமாதிதேவர்முதலிய யாவரும் அவனை வழிபட்டு அருள் பெற்றுய்ய வேண்டிய சீவர்களே யென்பதைத் திருவாசக முதலிய முக்கியப் பிரமாணங்களால் எடுத்துக்காட்டுபவர்கள்; சிவபக்த சிரோமணிகள்; சிவபக்தப் பிரியர்கள்; அறுபத்துமூவர் முதலிய உண்மை நாயன்மார்களைச் சாதியாதிகள் சீரநோக்கியன்றிச் சிவனடி நீழலில் இரண்டறக்கலந்த சைதன்யங்களுக்கு இல்லையேயென்னும் உண்மைமேற்கொண்டு குருபூஜை படம்

கட்டி அந்தந்தத் திருநக்ஷத்திரங்கடோறும், அவ்வக்குருபூஜாராதனைகளை நியமமாகச்செய்து வருகின்றவர்கள். இன்னும் தங்கள் சாதிமேன்மைக்குரிய நல்லொழுக்கங்களெல்லாம் மேற்கொண்டவர்கள். வேதசிவாகமங்களும் அவை போதித்த ஞான கர்மானுஷ்டான நாகரீகங்களும் குறைந்து ஊனசாஸ்திரங்களும் அவை போதித்த ஊனநாகரீகங்களும் தலையெடுத்து வழங்கும் இந்நடுவந்த காலத்திலே வைதிக சைவமெங்கே? சிவாகமமெங்கே? பத்திகளெங்கே? இவையெல்லாம் போன இடந்தெரியாமற் புல்முளைத்துப் போகவந்த காலமன்றோ இக்காலம்! இஃதிங்ஙனமாகவும் திருவீழிமிழலையில் அறுபத்துமூன்று நாயன்மார்களுக்குப் புதிதாகக் குருபூஜைமடங் கட்டிவைத்த புண்ணியவான்களான கோத்தமங்கலம் நகரத்தார்களுக்குக் காலத்தினாற்செய்த நன்றிக்கு இவ்வைதிகசைவ உலகம் அவர்களைவாழ்த்துவதல்லது வேறு என்னைகைம்மாறுசெய்யவல்லது? ஆதலால் கைம்மாறு கருதா நன்றியாளர்களாகிய கோத்தமங்கலம் நகரத்தார்கள் இன்னும் சிவபுண்ணியங்களைத் தாமேசெய்து உலகம் காக்கவேண்டி. அவர்கள் ஆயுராரோக்கிய திடகாத்திர சர்வைசுவரிய சர்வஜய சர்வமங்கள யோகக்ஷேமங்களை எய்தி இனிது வாழுமாறு வாழ்த்துரை செய்கின்றோம்.

"நலமலிசெய் கையராய வறுபத்து மூவரா நாயன் மார்கள்
வலமலிமா தேவனடி யடைந்தநாட் சிறந்தோய மாண்பி னோர்க்கு
நிலமலிவண் டிருவமுதுங் கறியமுதுஞ் சிற்றுணவும் நெய்யம் பாலும்
தலமலிய நிறைத்தூட்டித் தொழுநர் பெறும் பேற்றினையார் சாற்ற
[வல்லார்."

"நாடியவத் தினத்திலமு தூட்டுசிறப் பொடுமவ்வந் நாயன் மார்க்குக்
கூடியமட் டுஞ்சிறப்ப வபிடேக நிவேதனமுங் குலவச் செய்து
நீடியவுற் சவமுநடத் திடுதலதி விசேடமென நிகழ்த்தா நிற்பர்
பாடியபன் னூலுமுண ராசார வொழுக்கமிகு பண்பி னோரே."

"இந்தவிதம் பூசனைசெய் புண்ணியர்க ளெந்நாளு மினிமை மேய
சந்ததமனை வியர்மக்கள் தவாதகடும் பினர்பலருந் தழுவ வாழ்ந்து
கந்தமலர்க் கற்பகநா டாதியபல் போகமெலாம் களிப்பத் துய்த்துப்
பந்தமினம் பரமசிவ னடிக்கலப்பாம் பெருவாழ்வும் பற்று வாரால்."

(மஹாவித்வான் ஸ்ரீ மீனாட்சிசுந்தரம்பிள்ளையவர்கள் வாக்கு.)

திருச்சிற்றம்பலம்.

ஸ்ரீ மெய்கண்ட தேசிகன் திருவடி வாழ்க.

பொது மொழி.

(சம்ஸ்கிருதம்.)

பரதகண்டம் ஒரு பெரிய நாடு. அது முற்காலத்திற் பல்வேறு அரசுகளுடையதாயிருந்தது. அவையெல்லாம் ஒழிந்தன. அக்கண்டத்தை ஒரே அரசு கைக்கொண்டது. அது ஆங்கில அரசு. இப்போதிருப்பதும் அதுவே. அக்கண்டம் பல மொழிகளையும் உடையது. அவையெல்லாம் பழையன. ஆனால் அவை மறையவில்லை. ஒரேமொழி வழங்கும் நிலைக்கு அக்கண்டம் இன்னும் வந்திலது; இனியும் வராது. அம்மொழிக்காரருட் சிலரோ பலரோ ஒரே யிடத்திற் கூடுவர். அவ்வின்றியமையாமை அடிக்கடி நேரும். சுயம்வரமண்டபங்களை யறிக. அவற்றிற் கூடுபவர் தம்முட்பேசி உறவாடாமலிருக்கமுடியாது. அப்பொருட்டு அவர்க்கெல்லாம் ஒரு பொதுமொழி இருந்தேதீரவேண்டும். அதுதான் சம்ஸ்கிருதம். தமயந்தியின் சுயம்வரத்தில் வந்த பல்வேறுமொழி மக்களும் அம்மொழியிலேயே பேசிக்கொண்டனர். அவ்வுண்மையை ஹர்ஷர் நைஷதத்திலும் அதிவீரராம பாண்டியர் நைடதத்திலும் விளக்கியுள்ளார். இருவரும் வித்துவத் தலைவர், அரசச் சிரேட்டர்.

சம்ஸ்கிருதம் பதினெட்டுமொழிக் காரருக்கும் உரியது. இடைக்காலத்தில் அதன் பயிற்சி தமிழரிடங் குன்றியது. ஆகையால் அது வடமொழியென்று பிற்காலத் தமிழராற் கூறப்பட்டது. சேனாவரையர் முதலியோர் அவ்வுண்மையை உடன்படுகின்றனர். அதனால் சம்ஸ்கிருதம் தமிழருக்கும் உரியதென்பது சித்தம். அவ்வுரிமை மற்றவருரிமையிற் குறைந்ததுமன்று.

பல மொழிகளில் உலகவழக்கு இலக்கியவழக்கு என இரண்டு வகையுண்டு. இலக்கியவழக்குச் செய்யுள் வழக்கெனவும்படும். சம்ஸ்கிருதத்திலும் அவை உள. ஆண்டு உலக வழக்கைப்பிராகிருதமென்ப. அதுவே பேச்சு வழக்குப் பகுதி. செய்யுள் வழக்கே

சம்ஸ்கிருதம். நாளிதுவரை எல்லாமொழிக்காரரும் முயன்று படிப்பது சம்ஸ்கிருதமே. சம்ஸ்கிருதந் தவிர வடநாட்டிற் பல மொழிகள் உள. சம்ஸ்கிருதத்தையும் பிராகிருதத்தையும் அடியாகக் கொண்டு அவை தோன்றின. அவற்றுள் ஒவ்வொரு மொழியும் ஒவ்வொரு கூட்டத்தாருக்குச் சொந்தமாயிற்று. அவர் பேச்சு வழக்குக்கள் அதிலேயே நிகழ்ந்தன. நிகழவே பிராகிருதங் கைவிடப்பட்டது. அது நசித்தது. சம்ஸ்கிருதம் பல்கலைக் களஞ்சியம். ஆகலின் அதுமட்டில் எல்லாராலும் போற்றப்பட்டுவருகிறது.

தமிழுக்கென ஒரு சமயமில்லை. தெலுங்குக்கு வங்கத்துக்கு மற்றமொழிகட்குளனவும் அஃதில்லை. சமயத்தைமொழிபற்றியழைப்பது மடமை. இடம்பற்றி யழைப்பதுபோலும் அது. பரதகண்டத்திலுள்ள எல்லாமொழியினரும் சிலசமயங்களையே தழுவுகின்றனர். உதாரணமாகச் சைவத்தை எடுத்துக்கொள்க. அச்சமயம் இமசேதுவரை பரவியது. எல்லாமொழியினருள்ளும் அச்சமயிகள் உளர். எல்லாமொழிச் சைவருக்கும் பொதுப்பிரமாணமாயுள்ள நூல்கள் சம்ஸ்கிருதத்திற்றானிருக்கின்றன. பிறமொழிச் சைவப் பெரியாரெல்லாம் தமிழச் சைவருக்கு அப்பாலும் அடிச்சார்ந்தார். எல்லாமொழிச் சைவரும் ஒருவரை யொருவர் அறிதல்வேண்டும். அவர் தம்முள் அளவளாவி ஒன்றுபடவேண்டும். அப்பொருட்டுச் சம்ஸ்கிருதப் பயிற்சியே அவர்க்கெல்லாந் துணையாவது. அப்போதுதான் சைவபரிபாலனம் நன்கு நடைபெறும். சுயராச்சியங் கிடைத்தபிறகு அவர் ஏமாற்றப்படமாட்டார்: அவருக்குக்கிடைக்க வேண்டிய பங்கு தவறாது. ஆகவே சமய வளர்ச்சிப் பொருட்டு இன்றியமையாது பயிலத்தக்க பொதுமொழியாகவும் சம்ஸ்கிருதம் இருந்து வருதல் காண்க.

சம்ஸ்கிருதம் பார்ப்பன மொழி, அதைத் தமிழர் கற்றல் கூடாது என்றல் பார்ப்பனர் கொள்கை. சம்ஸ்கிருதம் மிலேச்ச மொழி, அதைத் தமிழர் கற்றல்வேண்டாம் என்றல் தனித் தமிழ் விருப்பர் கொள்கை. தமிழர் சம்ஸ்கிருதம் படிப்பதை அவ்விருவகையினரும் விரும்பார். அவர் தரம் அது.

ஆங்கிலம் ஆங்கிலேயருக்கே சொந்தம். அது ஒரு காலம். பிற்காலத்தில் அம்மொழி அவரால்மாத்திரம் விருத்தியடையவில்லை. உலகெங்குமுள்ள மற்ற மொழிக்காரருள் எத்தனையோபேர் அதிற்

பேசினர்; சிறந்த பலநூல்களை ஆக்கினர். அதனாலும் அது சிறக்கலாயிற்று. ஆகையால் இனி அது ஆங்கிலேயரின் மொழியாகாது. உலகுக்கே அது பொதுவிற் சொந்தம். இக்கருத்து இப்போது எங்கும் பரவிவருதல் காண்க. அப்படியே சம்ஸ்கிருதம் பார்ப்பனருக்கே சொந்தமாகட்டும். அது அந்தக் காலம். நெடுங்காலத்துக்கு முன்னரே அம்மொழியும் பரதகண்டத்தளவில் ஆங்கிலம் போலாய்விட்டது. பார்ப்பனர் அஃதறிந் தடங்குவது உத்தமம்.

பரதகண்டம் சுயராச்சியம் அடையும். அவ்வரசு நடைபெற வேண்டும். அப்பொருட்டு ஒரு பொதுமொழி இருப்பது நலமே. சம்ஸ்கிருதமே அம்மொழியாகலாம். சமய ஞானம் பொதிந்தது அது. அரசை நடத்தும் ஞானம் அதில் இல்லாமலா போம்? இவ்வாங்கில அரசை நடத்தும் ஆங்கிலம் இலக்கிய வழக்குடையது. படித்தவர்தான் அரசை நடத்தவல்லார். அவருக்குப் பிராகிருதங்கள் என்? ஆகவே சம்ஸ்கிருதந்தான் கட்டாயபாடமாதற்குரியதென்க. அது கட்டாயமானால் தமிழர் பாக்கியசாலிகளே. தமிழச் சைவர்க்கு அது பெரும்பாக்கியமாகும்.

தமிழில் இலக்கணம் இலக்கியம் தருக்கம் சமயம் தத்துவம் எல்லாமுண்டு. அந்நூல்களிலெல்லாம் சம்ஸ்கிருதச் சொற்களும் தொடர்களும் இலக்கணமுடிபுகளும் கலந்திருக்கும். அக்கலப்பு ஏறியுங் குறைந்து மிருக்கலாம். தனித் தமிழ் விருப்பர் அந்நூல்களுக்கு முழுப்பொருள் காண்பதெப்படி? பொருளறிய வாராத நூல்கள் சாவது நிச்சயம். அக்கொலையை அவரே செய்தவராவர். அவர் சமய நூல்களை இப்போது அநேகமாய்த் தொடுவதில்லை. அவற்றிலுள்ள சம்ஸ்கிருதப் பகுதிகளுக்குப் பொருள்காண முடியாமையே அதற்குக் காரணம். அதனால் அவர்பாற் சமயப்பற்றுஞ் சூனியமாகி அவரை விலங்கியல் கவிகின்றது. அந்நிலை இரங்கத் தக்கது. அந்நூல்கள் போற்றப்படவேண்டும். அந்த அளவிற்காவது சம்ஸ்கிருதப் பயிற்சி அவருக்கு முக்கியம். பார்ப்பனர் அப்பயிற்சியைத் தமிழருக்கு ஊட்டமாட்டார். அவ்வளவு கருணைசாலிகளல்லர் அவர். தமிழர் எந்த அளவிற்குச் சம்ஸ்கிருதம் பயிலாதமட்டிகளாயிருக்கின்றனரோ அந்த அளவிற்குப் பார்ப்பனரே நலம் பெறுவர். தீங்கு தமிழருக்கேயாம். ஹிந்தி கட்டாயபாடமாக்கப்படுகிறது. தமிழர் சம்ஸ்கிருதம் படிப்பதற்காக வன்று

அது. தாம் சம்ஸ்கிருதத்தை நேரே கற்பிக்கும் பாடசாலைகளில் தமிழ்மாணவரை மனக்கசப்பின்றிச் சேர்த்துக்கொள்வதே அப் பார்ப்பனரின் பரந்தநோக்கத்துக்குப் போதுமானது. ஹிந்தி யெதிர்ப்பாளர் அதை யறிக.

தமிழர் பல சமயிகளாயிருக்கின்றனர். கிறிஸ்தவர் இசுலாமியர் முதலியோருக்குச் சம்ஸ்கிருதத்திற் சமயப் பிரமாண சாத்திரங்கள் கிடையா. அவர் அம்மொழியை வெறுக்கலாம்; பயிலாதொழியலாம். அதனால் அவரடையும் நஷ்டம் ஒன்றுமில்லை. ஆனாற் சைவராதியோரும்அவரோடு சேர்ந்துகொள்கின்றனர். அவருக்கோ அம்மொழியிற் சமயப் பிரமாண சாத்திரங்கள் பலவுள. அதனை அவர் அறிதல்வேண்டும். அம்மொழியை வைதல் அவருக்குத் தகாது. அதனை அவர் பயிலாதொழிவதுந் தப்பு. சகவாச தோஷத்தால் அவர் நஷ்டமடையாதிருப்பாராக.

இப்போது பரதகண்டம் இசுலாமியரும் நிறைந்தது. அவருக்கும் ஹிந்துக்களுக்கும் பொதுவானது அந்நாடு. அவ்விருதிறத்தினரும் அதை ஆளவேண்டியவர். மொழியும் அவருக்குப்பொதுவாயிருப்பது வேண்டப்படுவதே. ஆனால் சம்ஸ்கிருதம் அவ்விருவகையாருக்கும் பொதுவாயிருக்கமுடியாது. ஆயினுமென்? அவ்விருதிறத்தார்க்கும் பொதுமொழி எதுவுங் கிடையாது. இசுலாமியருக்குப் பொது உருது. ஹிந்துக்களுக்குப் பொது சம்ஸ்கிருதம். எப்படியோ இரண்டு பொது மொழிகட்கிடனாயிற்றுப் பரதகண்டம். அதை மாற்றுவது அசாத்தியம். ஆயினும் அக்கஷ்டத்துக்கு நிவிர்த்தியும் உண்டு. அஃதிரண்டு விதம். ஒன்று பெருமையற்றது. இன்னொன்று அத்துணை மோசமானதன்று. உருதுவை ஹிந்துக்களுங் கட்டாயம் படிக்கவேண்டும். அல்லது சம்ஸ்கிருதத்தை இசுலாமியருங் கட்டாயம் படிக்கவேண்டும். இசுலாமியர் பௌருஷமுடையார். அவர் சம்ஸ்கிருதக் கட்டாப்படிப்புக் கிசையார். ஹிந்துக்களிடம் பௌருஷங் குறைவு. அவரே உருதுக்கட்டாயப் படிப்பில் தள்ளப்படுவர். பெருமையற்ற நிவிர்த்தி இது. ஹிந்துக்களும் பௌருஷமுடையராயின் உருதுவும் சம்ஸ்கிருதமும் பொது மொழிகளாகலாம். அதனாற் சில இடையூறுகள் ஏற்படத்தான் செய்யும். அவை சில துவிபாஷிகளால் நிவிர்த்தியாதல் கூடும்.

இது மோசமற்ற நிவிர்த்தி. கிறிஸ்தவராதியோர்க்கு அவ்விரண்டும் அயல்மொழிகள். அவற்றுள் தமக்கிஷ்டமானதொன்றை அவர் கட்டாயம் பயில்க. அவர் பௌருஷம் அதனாற் குறையாது.

(ஹிந்தி உருது ஹிந்துஸ்தானி.)

இக்காலத்தில் பரதகண்டத்துக்குப் பொதுவாகற் பாலதென ஒரு மொழி தெரிந்தெடுக்கப்பட்டுளது. அதை ஹிந்தி யென்பர் ஒரு சாரார். உருதுவென்பர் இன்னொரு சாரார். ஹிந்துஸ்தானி யென்பர் பிறிதொரு சாரார். அம்மூன்று பேர்களும் மூன்று வேறு மொழிகளுக்குரியனவா? ஒரேமொழிக்குரியனவா? என்பது ஆராய்ச்சி. சிலமாதங்களுக்கு முன்வரை அம்மூன்று சொற்களும் ஒரு மொழியைச் சுட்டும் பெயர்களெனப்பட்டன. தமிழ் நாட்டில் இந்தியெதிர்ப்புத்தோன்றியது. மூன்றும்வெவ்வேறு மொழிகளின் பெயரென்பது வெளியாயிற்று.

சாமானிய ஹிந்துக்கள் சாமானிய விஷயங்களைப் பேசிக்கொள்வதற்குச் சம்ஸ்கிருதத்திலிருந்து கடின பதங்களை நீக்கி எடுக்கப்பட்ட சாமானிய பதங்களின் தொகுதியே ஹிந்தி யென்கிறார் சிலர். சென்னை முதன்மந்திரி ராஜகோபாலாச்சாரி ஹிந்தியை "Cooked up Sanskrit" என்று சொன்னதன் கருத்து அதுவே.

அரபியும் பாரசீகமுந் தெரிந்தவர் பரதகண்டத்துக்கு அரசராய் வந்தனர்; அவருக்கு இந்நாட்டுமொழி தெரியாது; இந்நாட்டுமொழி ஹிந்தி; அவருக்கு ஒரு சமரசமொழி வேண்டப்படுவதாயிற்று; அவ்வின்றியமையாமையால் அம்மொழியுந் தோன்றியது; அதுவே உருது; அது அவர்க்கும் இந்நாட்டு மக்களுக்கும் கருத்துக்களை வெளிப்படுத்திக்கொள்ள உதவியது; ஆகவே உருதுவென்பது அரபி பாரசீக ஹிந்தியென்பவற்றின் சேர்க்கையால்விளைந்தமொழி; இந்நாட்டுமக்களையும் அவ்வந்தேறிகளையும் ஒன்றுபடுத்தியது அது; அந்த உருதுவே பிற்காலத்தில் ஹிந்துஸ்தானியெனவும் பட்டது என்கிறார் சிலர். "Urdu was a 'compromise language' born of the necessity of the rulers - who knew Arabic and Persian, but not the language of the country, Hindi - developing a means of communication with the people of the land. Urdu then was born of the intermixture

of these languages and was a means of unifying the people of the country and the new comers. In course of time, it became what was known as Hindustani" என்று சரோஜினி சொன்னதை 17—12—38 ஹிந்துவிற் காண்க.

ஹிந்துஸ்தானியைப் பற்றிப் பலர் பலவாறு பேசுகின்றனர்.

ஹிந்துஸ்தானி இரண்டுவிதம்; ஒன்று உருது ஹிந்துஸ்தானி, இன்னொன்று ஹிந்தி ஹிந்துஸ்தானி யென்கிறார் சிலர்.

"A recognised language means any one of the following languages, namely, Gujarati,....Urdu or Hindi Hindustani" என்று பம்பாய்ச் சட்டசபை விவாதத்துக் கெடுத்துக் கொண்டதை 18—8—38 ஹிந்துவிற் காண்க.

ஹிந்தி ஹிந்துஸ்தானியென்பதுகிடையாது, அது காங்கிரசாற் புதிதாகத் தொடங்கப்பட்டது என்கிறார் ஆர். என். மாண்ட்லிக் என்பவர். "As to Hindi Hindustani, it was newly started by the Congress and did not really exist" என்று அவர் விவாதிப்பதை அந்த ஹிந்துவிற் காண்க.

உருதுவே ஹிந்துஸ்தானி யென்கிறார் சரோஜினி. முன் வாக்கியம் காண்க.

உருது ரேக்டா ஹிந்தி ஹிந்துஸ்தானி யென்பன ஒரு மொழிக்கே பெயர்; பாரதகண்டத்து மக்களும் அங்குப்படையெடுத்துவந்த இசுலாமியரும் அளவளாவினர்; அதனால் அம்மொழி தோன்றியது; பாரதகண்டமே அதற்குப் பிறப்பிடம்; ஆனாற் பாரசீகம் அரபி முதலிய அயல்நாட்டு மொழிகளிலிருந்தும் ஹிந்துக்களின் பல்வேறு மொழிகளிலிருந்தும் எடுக்கப்பட்ட பல சொற்களின் கலவையே அது என்கிறது மாஜி ஜில்லா ஜட்ஜ் ஆர். எஸ். சங்கர ஐயர் என்பவர் எடுத்துக்காட்டிய புத்தகமொன்று. அது "The dialect called Zaban - i - urdu, Rekhta, Hindi or Hindustani, was formed through the intercourse of the Muhammadan invaders of India with the people of the country; and though its structure is chiefly Indian, yet the materials of which it is composed are taken

abundantly almost at pleasure, from the Persian, Arabic and other foreign languages as well as from the various dialects peculiar to the Hindus" என்று சொல்லுவதை 7—1—39 ஹிந்துவிற் காண்க.

இந்தியும் இந்துஸ்தானிதானென்கிறது அப்புத்தகம்.

அரபி பாரசீகக் கலவையில் இந்திமாத்திரங்கூடி உருதுவாயிற்றென்கிறார் சரோஜினி. அக்கலவையில் வேறு அயல்நாட்டு மொழிகளும் இந்துக்களின் வேறு பல மொழிகளுங் கூடி அதுவாயிற்றென்கிறது அப்புத்தகம்.

உருதுவைப் படைமொழி, இந்துஸ்தானியைப் பொதுமக்கள் மொழி என்கிறார் அந்த ஐயர். அவர் அந்த இந்துவில் "Urdu is a military language. Hindustani is the general people's language" என்பது காண்க.

உருது வென்ற பதமே படைமொழி யென்ற பொருளுடையது; இந்துஸ்தானியென்பது முஸ்லிம் உலகிற்கே தெரியாதமொழி யென்கிறார் ஸர் எ. எம். கே. தெஹ்லாவி யென்பவர். "Urdu meant a camp language. Among the Muslims, Hindustani was not known at all" என்று அவர் சொன்னதை 18—8—38 இந்துவிற் காண்க.

இந்துஸ்தானியே படைமொழி யென்கிறார் கே. சந்தானம் என்பவர். அவர் "It was perhaps not known that every European army officer must barn Hindustani. That was compulsory. That was because an army could not be controlled without unity of language" என்றதை 9-1-39 இந்துவிற் காண்க.

இந்துஸ்தானியும் உருதுவும் வெவ்வேறு மொழிகளென்கிறார் சிலர். இந்துஸ்தானியை உருப்படுத்த உருதுவைச் சிதைக்கவேண்டுமென்று சொல்லப்படுகிறது; அது இரங்கத்தக்கதென்பது அவர் கருத்து. அலகபாத்தில் அகில இந்திய உருதுதினம் கொண்டாடப்பட்டது. ஸர் டெஜ்பகதூர் சாப்ரு தலைமை வகித்தார். அதில் நிகழ்ந்த "Resolutions were passed advocating the cause of the Urdu language and regretting the attempts to annihilate Urdu under the cover of promoting Hindustani" என்ற நிகழ்ச்சியை 22—12—38 இந்துவிற் காண்க.

இந்துஸ்தானி யென்கிற மொழி இப்போது கிடையாது; அது காங்கிரஸ்தலைவர்களின் மனக்கோட்டையிற்றா னுண்டு என்கிறது அகில இந்திய முசிலீம் லீக். "Hindustani is actually a non-existant language, which exists only in the minds of Congress leaders. The living languages are Hindi and Urdu" என்பது அக்கமிட்டியின் அறிக்கை. 25–12–38 இந்துக் காண்க.

இந்துஸ்தானி யென்கிற மொழி இப்போதில்லை; ஆனாலும் அதை உண்டாக்கிக் கொள்ளலாம் என்கிறார் காந்தி. காங்கிரசுக் கொள்கையும் அதுவே. காசியில் திரட்டப்பட்ட இந்தி அகாதியி லுள்ள உருதுச் சொற்களையும் ஊஸ்மேனியாவில் திரட்டப்பட்ட உருது அகாதியிலுள்ள இந்திச் சொற்களையும் தெரிந்தெடுத்து அவற்றின் அகாதியொன்றை மௌல்வி ஆப்துல் ஹக் சாஹப் என்பவர்வெளிப்படுத்தியிருக்கிறார்; இந்துஸ்தானி அகாதி அதுவே யென்று காந்தி காங்கிரசுக்குச் சிபார்சு செய்திருக்கிறார். புது வார்த்தைகள் வேண்டுமானால் அவற்றை உண்டாக்க அபுல்கலாம் அசாத் ராஜேந்திர பாபு வென்னுமிவர்களின் கூட்டம் ஏற்பட வேண்டுமென்ற யோசனையும் அவரால் சொல்லப்படுகிறது. அதனை "I understand that Maulvi Abdul Haq Saheb has produced a dictionary which has taken all the Urdu words that are to be found in the Benares Hindi Lexicon and Hindi words from the Osmania Lexicon. I have recommended to the Congress the adoption of the Maulvi Saheb's dictionary. And for new words I have suggested a board composed of Maulana Abdul Kalam Azad and Rajendra Babu" என்று 28-1-39 இந்துவில் அவர் சொன்னதாற் காண்க. பாட்னாவில் ஒரு கமிட்டி கூடியது. அது சர்க்காரால் நியமிக்கப்பட்டது. பொது இந்துஸ்தானி மொழியை உண்டாக்கவேண்டு மென்பதே அதன் நோக்கம். "The Committee....appointed by the Government of Bihar... with a view to finding out ways and means for evolving a common Hindustani language...met ......" என்றது

செய்தித்திரட்டு.

தலைமுறையாராய்ச்சி:— இத்தலைப்புடன் திரு. மு. சாம்பசிவநாயனர் செந்தமிழ் தொகுதி கூ. பகுதி கூ-பக்கம் சஉ-றில் "வதிட்டர் பூசித்ததலம் வதிட்டை; இது திட்டையென மருவித்தென்குடியிலுள்ள வதிட்டை, திருத்தென்குடித்திட்டை யெனக்காணப்படுகின்றது" என்று காட்டியுள்ளார்.

பலவான்குடி:—குமாரவிநாயகர் திருக்கோயிலில் ஆனி கoஉ உத்தர நாள் நடராசருக்கு திருமஞ்சன திருவாராதனைகளும் திருவுலாவும் செய்யப்பெறும். திருவாசகபாடசாலையில் சித்திரைச் சதயநாள் திருநாவுக்கரசு சுவாமிகள் குருபூசை நடைபெற்றது. இம்மதி உ௦ உ மூலநாள் திருஞான சம்பந்தமூர்த்தி சுவாமிகள் குருபூசையும், ஆனி அஉ மகநாள் மாணிக்க வாசகசுவாமிகள் குருபூசையும் திருவுலாவும் வழக்கம்போல் நடைபெறும்.

குமா. சு. குமரப்பசெட்டியாருக்குநல்லறிவுசுடர்கொளுத்திய ஆசிரியப் பாவொன்று வரப்பெற்றோம். ஆக்கியோன்பெயர் காணப்பெறாமையின் வெளியிடாது விடுத்தனம்.

குன்றக்குடி:—இம்மதி கஎஉ விசாகநாளில் அறுமாமுகவர் இருதேவி மாருடன் வைசாக மண்டபத்துக் கெழுந்தருளி மண்டபப்படி கொண்டு வெள்ளிரதாரூடராய் சர்வாலங்கிருதராய்த் திருவுலாப் போந்தருளினர்.

சிதம்பரம்:— சிவஸ்ரீ க. சிவசடாக்ஷக்குருக்களவர்கள் சாஹித்திய சிரோமணித் தேர்வு பெற்றுள்ளார்.

சிவபதமடைந்த இருவர்:— ஆத்தன்குடி திருவாளர், கு. ராம. ப சிவலிங்கச் செட்டியாரவர்கள் சித்திரை ௩௰௨-யிலும், கோனாபட்டு திருவாளர், கு. அ. ப. அருணாசலச் செட்டியாரவர்கள் வைகாசி கஉ-யிலும் சிவகதியடைந்த செய்தியறிந்து அநுதாபமுறுகின்றோம். அவர்களின் ஆன்மா இறைவன் திருவடி நீழலில் இன்புற்றிருப்பனவாக.

தஞ்சை:— வைகாசி உ௰உ மூலநாள் திருஞானசம்பந்தமூர்த்தி சுவாமிகள் திருநாட்கொண்டாடிப் பல கோயில்களிலிருந்தும் புஷ்பப் பல்லக்குகளில் சுவாமிகள் எழுந்தருளுவர்.

கருந்திட்டைக்குடி:— ஸ்ரீ பெரியநாயகி சமேத வசிட்டேசுவர சுவாமிக்கு வைசாக பிரமோற்சவம் வைகாசி சு௨ தொடங்கி நடைபெறுகிறது. ககஉ எழுர்சூழ வெழுந்தருளச்செய்து நிறைவேறும்.

வடகால்பதி:— ஸ்ரீ தெண்டாயுதபாணி திருக்கோயிலில் நடு விமானம், நாற்புறமாளிகை, திருநெடுமதில் ஆயதிருப்பணிகள் நிறைவேறின. இம்மதி உகஉ திங்கட்கிழமை காலை எ-இ-க்குமேல் கசவ-நாழிகைக்குள் ஸ்ரீ தண்டபாணிக்கும், மூத்த பிள்ளையாருக்கும் அஷ்டபந்தன மகாகும்பா பிஷேகம் வடகால் கிராமத்தாரால் நடைபெறும்.

கும்பகோணம்:— பெரியமடத்தின் பட்டாதிகாரசிம்மாசனரோகண மகோற்சவமும் ஸ்ரீ வீரபத்திரசுவாமிகோயில் முதலிய கும்பாபிஷேகமும் சித்திரைமாதத்தில் நிறைவேறின. பூரண கலாரூபம்நிறைவுற இம்மதி உகஉ காலை கூ-மணிக்குள் மண்டலாபிஷேகம் நடைபெறும்.

குடந்தையில் கல்விபயிலும் வீரசைவ மாணவர்கட்கு இம்மடத்தின் சார்பில் எளிய செலவில் உண்டியும் உறையுளும் உதவவும் தேவார திருவாசகங்கள் ஓதுவிக்கவும் ஏற்பாடுசெய்திருக்கிறார்கள்.

சிவநேசன்.

விளம்பரம்:—சொக்கலிங்கம்புதூர் இடம், வீடு முதலியவைகளும், திட்டையில் உள்ள இடம், வீடு, தோட்டம், நன்செய் ஆகியவைகளும் என்னுடைய சுய சம்பாத்தியத்திலிருந்து வாங்கியவை. அவை சம்பந்தமான கடன்களும் இருக்கின்றன. என் தம்பி இராமையா சொக்கலிங்கம் புதூர் வீட்டில் குடியிருப்பதாலும்' அவன்பேரால் திட்டை மனை, இடம், தோட்டம், நன்செய்களுக்குப் பட்டா இருப்பதாலும் சட்டப்படி அவனுக்குப் பாத்தியமாகத் தக்கவையல்ல. என்னையல்லாமல் அவனோ என் தகப்பனாரோ, என் மகன் நடேசனோ, பிறரோ அவைகளைப் பெந்தக பராதீனம் செய்யின் அவை எத்தவகையிலும் செல்லத்தக்கவையல்ல.

பழ. க. கருப்பையாபிள்ளை.

ஸ்ரீ கொங்குமண்டல ஆதிசைவ மஹாஜனசபா இரண்டாவதாண்டு விழா:—எல்லாம் வல்ல சிவபெருமான் துணைகொண்டு பிரமாதிஸ சித்திரைமீ 13, 14 தேதிகளில் அபிஷேகபுரம் சிவஸ்ரீ பாலசுப்பிரமணிய சிவாச்சாரியர் அவர்கள் தலைமையில் திங்களூரில் சிவஸ்ரீ துரைசாமிக்குருக்களவர்கள் ஆதரவில் மிகச்சிறப்பாக நடைபெற்றது.

சமய, சமூக சம்பந்தமான பல தீர்மானங்கள் நிறைவெய்தின.

திருச்செங்கோடு:— ஸ்ரீ அர்த்தநாரீசுவரருக்கும், செங்கோட்டுவேலவருக்கும் வைகாசி ௮௨ திருவிழாத்தொடங்கி நடைபெறுகிறது. ௨௨ நிறைவேறும். ௧௰௨ திருத்தேர்.

திருமயிலை:— ஸ்ரீ காமாட்சியம்பிகை சமேத ஸ்ரீ வெள்ளீசுவரருக்கு வைகாசி ௮௨ தொடங்கி பிரமோற்சவம் நடைபெறுகிறது. ௯௨ நிறைவேறும்.

திருப்பூந்துருத்தி:— அப்பர் மாணவர் கழகத்தின் ஏழாவதாண்டுவிழா சித்திரை ௬௰௨ திரு, J. M. சோமசுந்தரம் பிள்ளை அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தேமத்தாம்பட்டி:— திருநாவுக்கரசு வித்தியாசாலையின் ௯-வது ஆண்டு விழாவும், விசாலாட்சி சங்கத்தின் மூன்றாவதாண்டு விழாவும், சித்திரை ௯௨ கோயம்புத்தூர் திரு, C. M. இராமச்சந்திர செட்டியாரவர்கள் தலைமையில் நடைபெற்றன.

உ. சிறுவயல்:— ஸ்ரீ பொன்னழகியம்பாள் வித்தியாசாலைக் கட்டிடத் திறப்புவிழா வைகாசி ௨௨ திரு, P. S. குமாரசாமி ராஜா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கண்டனூர்:— ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத்தின் மூன்றுவது நான்காவது ஆண்டு விழா சென்னை வழக்கறிஞர் திரு, T. K. சிதம்பரநாத முதலியார் அவர்கள் தலைமையில் வைகாசி ௧௰௨ நடைபெற்றது.

கொப்பனாபட்டி:—கலைமகள் கல்லூரியின் கலைமகளார் திருக்கோயில் திறப்புவிழா மகாமகோபாத்தியாய உயர்திரு உ. வே. சாமிநாதையரவர்கள் தலைமையில் வைகாசி ௩௨ காலை 9 மணிக்கு நடைபெற்றது.

திட்டை 'சிவநேசன்' அச்சியந்திரசாலையில், பத்திராதிபர், பலவான்குடி
ரா... இராமசாமி செட்டியாரால் அச்சியற்றி
...ரியிடப்பெற்றது.